Follow our WhatsApp Channel

Scan this QR code using the CAMERA to view or follow our Channel

PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel

PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 178 09.02.2026 திங்கட்கிழமை

Chennai Volume: 01 Issue: 178 Monday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

# ரெயில்வே திட்டங்களுக்கு நிதியை விடுவிக்க வலியுறுத்தி

# பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்

**சென்னை,பிப்.9:**

தமிழ்நாட்டில் ஒன்றிய அரசினால் நிறைவேற்றப்பட்டு வரும் ரெயில்வே திட்டங்களின் தற்போதைய நிலை குறித்து தெரிவித்து, நிலுவையில் உள்ள பிரச்சனைகளுக்கு, குறிப்பாக, நிலம் கையகப்படுத்துதலுக்கான நிதியை முறையாக விடுவித்தல் மற்றும் கிடப்பில் போடப்பட்டுள்ள திட்டங்களை மீண்டும் தொடங்குதல் போன்றவற்றில் இந்தியப் பிரதமர் அவர்கள் தலையிட்டு உரிய நேரத்தில் தீர்வு காணவேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளதோடு, ஊடகங்களில் இதுதொடர்பாக பரவி வரும் உண்மைக்குப் புறம்பான சில செய்திகளுக்காகவும் இக்கடிதத்தினை எழுதுவதாக முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில், ஒன்றிய அரசின் பல்வேறு ரெயில்வே திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 2500.61.06 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்றும், இதில் 931.52.96 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களுக்கு ரெயில்வே துறை நிதியை ஒதுக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், ரெயில்வே துறையிடமிருந்து சமீபத்தில் திருத்தப்பட்ட நிலத் திட்ட அட்டவணை (LPS) பெறப்பட்ட இரண்டு திட்டங்களுக்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு நிர்வாக அனுமதி செயல்பாட்டில் உள்ளது என்றும், அது விரைவில் வழங்கப்படும் என்றும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். 19 முக்கிய ரெயில்வே திட்டங்களுக்கு நில எடுப்பு செய்யப்பட வேண்டிய 1273.05.15 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்களில், 1198.02.34 ஹெக்டேர் பரப்புள்ள நிலங்கள், அதாவது 94 விழுக்காடு நிலங்களைக் கையகப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டு, அவை ரெயில்வே துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், இருப்பினும், ஐந்து திட்டங்களுக்கு ரெயில்வே துறையால் நிலத் திட்ட அட்டவணை (LPS) இன்னும் வழங்கப்படவில்லை.



தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கியத் திட்டங்களான திண்டிவனம்-நகரி அகல ரெயில் பாதை, மதுரை-தூத்துக்குடி அகல ரெயில் பாதை, மணியாச்சி-நாகர்கோவில் அகல ரெயில் பாதை, கன்னியாகுமரி-நாகர்கோவில் அகல ரெயில் பாதை இரட்டிப்பாக்குதல், நாகர்கோவில்-இரணியல் அகல ரெயில் பாதை இரட்டிப்பாக்குதல், தூத்துக்குடி-மதுரை (அருப்புக்கோட்டை வழி) புதிய அகல ரெயில் பாதை (கட்டம்-I), சின்னசேலம்-கள்ளக்குறிச்சி புதிய அகல ரெயில் பாதை, மயிலாடுதுறை-திருவாரூர் அகல ரெயில் பாதை, பட்டுக்கோட்டை நான்கு முனை சந்திப்பு, புதிய அகல ரெயில் பாதை (சேலம்-கரூர் வழித்தடம் உருவாக்குதல்), மன்னார்குடி-நீடாமங்கலம் அகல ரெயில் பாதை, சென்னை கடற்கரை-கொருக்குப்பேட்டை மூன்றாவது, நான்காவது வழித்தடம் மற்றும் விழுப்புரம்-திண்டுக்கல் அகல ரெயில் பாதை ஆகிய திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன என்றும், மேலும், மீதமுள்ள திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நில எடுப்புப் பணிகளை முழுமையாக முடிப்பதற்கு நில உரிமையாளர்களுக்கு உரிய நேரத்தில் இழப்பீடு வழங்குவது மிக முக்கியம் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், துரதிர்ஷ்டவசமாக, ரெயில்வே அமைச்சகத்தால் நிதியை விடுவிப்பதில் ஏற்படும் தாமதங்கள், தனிப்பட்ட திட்டங்களுக்குப் பெரும்பாலும் நிதியினை முழுமையாக வழங்காமல் பிரித்து வழங்குவது என்பது, தமிழ்நாட்டில் ரெயில்வே திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள முன்னேற்றத்தினைத் தடுத்து, தாமதங்களுக்கு வழிவகுத்துள்ளதாகவும், பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்களுக்கு நீடித்த நிச்சயமற்றதொரு நிலையை ஏற்படுத்தியுள்ளது.

'திருவனந்தபுரம்-கன்னியாகுமரி இடையேயான அகல ரெயில் பாதை இரட்டிப்பு' திட்டத்திற்கான 16.86.51 ஹெக்டேர் நில எடுப்புப் பணி முடிக்கப்படாமல் இருப்பது இதற்கு ஒரு பொருத்தமான உதாரணம் என்று சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், இத்திட்டத்திற்கான நில எடுப்பிற்கு உரிய இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான 289.78 ரூபாய் கோடி நிதியினை ரெயில்வே துறை இன்னும் ஒதுக்கவில்லை என்றும், இது தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ஒரு பெரிய திட்டம் என்றும், இது ஒன்றிய அரசின் திட்டக் கண்காணிப்புக் குழுவின் (PMG) வலைதளத்தின் மூலம் கண்காணிக்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார். நிலம் கையகப்படுத்துதலுக்கான நிதியை பகுதி, பகுதியாக வழங்குவதற்குப் பதிலாக, மொத்தமாக, சரியான நேரத்தில் ஒதுக்குவதன் மூலம், இந்த முக்கியமான திட்டங்களைத் தடையின்றி விரைவாக முடிக்க முடியும்.

தமிழ்நாடு அரசு, ரெயில்வே திட்டங்களுக்கு உயரிய முன்னுரிமை அளித்து, வலுவானதொரு கண்காணிப்பு வழிமுறையினை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள சிக்கல்களைத் தீர்க்கவும், நிலுவையில் உள்ள திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்துவதை விரைவுபடுத்தவும், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளரும், போக்குவரத்துத் துறை செயலாளரும் ரெயில்வே அதிகாரிகளுடன் தொடர்ந்து மாதாந்திர ஒருங்கிணைப்பு கூட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்தத் தருணத்தில், சமீபத்திய ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு புதிய ரெயில்வே திட்டங்களுக்கான ஒதுக்கீடு ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பது குறித்து தாம் கவலையோடு குறிப்பிட விரும்புவதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இந்திய அளவில் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாகவும், உற்பத்தி மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கான முக்கிய மையமாகவும் விளங்கும் தமிழ்நாடு, தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்குத் தொடர்ந்து கணிசமான பங்களிப்பை வழங்கி வருகிறது என்றும், மேம்பட்ட ரெயில் இணைப்பு மற்றும் உள்கட்டமைப்பு மூலம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை மேலும் வலுப்படுத்தும் மகத்தான ஆற்றலை தமிழ்நாடு கொண்டுள்ளது.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு,

✶ நில எடுப்பு மற்றும் இழப்பீடு வழங்குவதை விரைவுபடுத்திட ஏதுவாக, அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்குத் தேவையான நிதியை தாமதமின்றி, முழுமையாக, முன்னுரிமை அடிப்படையில் விடுவிக்கவும்;

✶ ரெயில்வே துறையால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முக்கியமான திட்டங்களான தூத்துக்குடி-மதுரை (அருப்புக்கோட்டை வழியாக) புதிய அகலப்பாதை மற்றும் திண்டிவனம்-திருவண்ணாமலை அகலப்பாதை (ஏற்கெனவே 931.52.96 ஹெக்டேர் நிலத்தைக் கையகப்படுத்த நிர்வாக அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன) திட்டங்களை மீண்டும் தொடங்கிடவும், இதற்குத் தேவையான நிதியினை வழங்கிடவும்;

✶ தமிழ்நாட்டின் பொருளாதார நிலை மற்றும் வளர்ச்சித் தேவைகளுக்கு ஏற்ப, கூடுதலாக புதிய ரெயில் திட்டங்களை அனுமதிப்பது குறித்து பரிசீலித்திடவும்;

இந்தியப் பிரதமர் அவர்கள் தலையிட்டு, ஒன்றிய ரெயில்வே அமைச்சகத்திற்கு உரிய அறிவுரைகளை வழங்கிட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார். இந்தியப் பிரதமர் அவர்களின் தலையீடு, கூட்டுறவுக் கூட்டாட்சித் தத்துவத்தை வலுப்படுத்துவதோடு, ஒன்றிய மற்றும் மாநில அரசின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சனைகளை உடனடியாகத் தீர்க்க உதவிடும்.

இந்நிலையில், ரெயில்வே திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்க தமிழ்நாடு அரசு முழுமையாக உறுதிபூண்டுள்ளது என்று தெரிவித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இதுதொடர்பாக இந்தியப் பிரதமர் அவர்களிடமிருந்து விரைவில் சாதகமான நடவடிக்கையை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

## இன்றைய நாள்

திங்கள்கிழமை
(9–02–2026)
விசுவாவசு ஆண்டு, தை –26
பிறை: தேய்பிறை
திதி
சப்தமி காலை 7.05 வரை
பிறகு அஷ்டமி.
நட்சத்திரம்:
சுவாதி காலை 7.07 வரை
பிறகு விசாகம்
யோகம்
அமிர்த/ மரணயோகம்
ராகுகாலம்
காலை 7.30–9.00 மணி
எமகண்டம்
காலை 10.30 – 12.00 மணி.
சூலம் – கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 3–4 மணி

| | |
|---|---|
| மேஷம் | மேன்மை |
| ரிஷபம் | உயர்வு |
| மிதுனம் | ஆதரவு |
| கடகம் | முயற்சி |
| சிம்மம் | நன்மை |
| கன்னி | போட்டி |
| துலாம் | ஆக்கம் |
| விருச்சிகம் | ஆர்வம் |
| தனுசு | வெற்றி |
| மகரம் | லாபம் |
| கும்பம் | கவனம் |
| மீனம் | ஈகை |

## குரூப் 2, 2ஏ தேர்வுகள் ஒத்திவைப்பு

**சென்னை,பிப்.9:**

தமிழ்நாட்டில் குரூப் 2, 2ஏ தேர்வுகள் ஒத்திவைக்கப்படுவதாக டி.என்.பி.எஸ்.சி. அறிவித்துள்ளது. இன்று நடக்க இருந்த முதன்மை தேர்வுகள் ஒத்திவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் பல்வேறு இடங்களில் தேர்வில் குளறுபடி ஏற்பட்டதை அடுத்து தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தேர்வு நடைபெற உள்ள மறு தேதி பின்னர் அறிவிக்கப்படும் என தகவல் வெளியாகி உள்ளது.

## சென்னையில் கடும் பனிமூட்டம் – விமான சேவைகள் பாதிப்பு

**சென்னை,பிப்.9:** தமிழகத்தில் இன்று முதல் வரும் 11-ந்தேதி வரை நீலகிரி, திண்டுக்கல், சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர், வேலூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் அதிகாலை நேரத்தில் மிதமான பனிமூட்டம் காணப்படும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது.

இந்நிலையில் சென்னையில் அதிகாலையில் கடும் பனிமூட்டம் நிலவியது. சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை போன்ற மாவட்டங்களிலும் கடும் பனிமூட்டம் காணப்பட்டது.

சென்னையில் நிலவும் கடும் பனிமூட்டத்தால் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளது.


அதேபோல, திருத்தணி, திருவள்ளூர், அரக்கோணம் மற்றும் சூலூர்பேட்டை செல்லும் புறநகர் மின்சார ரெயில்களும் தாமதமாக இயக்கப்பட்டன.

## தேசிய குவான்டம் கம்ப்யூட்டர் மையத்துக்கு அடிக்கல்

### அமராவதியில் மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் பங்கேற்பு

**அமராவதி,பிப்.9:**

நாட்டிலேயே முதன் முறையாக தேசிய குவான்டம் கம்ப்யூட்டர் மைய கட்டிடத்திற்கு நேற்று அமராவதியில் மத்திய அமைச்சர் ஜிதேந்தர சிங் அடிக்கல் நாட்டினார். இதில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு மற்றும் மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள் பலர் பங்கேற்றனர்.




ஆந்திர மாநில தலைநகர் அமராவதியில் நேற்று மாலை 'அமராவதி குவான்டம் வாலி' மைய கட்டிடத்திற்க்கு மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஜிதேந்தர் சிங், ஆந்திர முதல்வர் சந்திர பாபு நாயுடு ஆகியோர் கூட்டாக அடிக்கல் நாட்டினர்.

அப்போது சந்திரபாபு நாயுடு பேசுகையில், நாட்டின் தொழில்நுட்ப எதிர்காலத்திற்கு ஒரு புதிய அத்தியாத்தை தொடங்கி வைக்கும் விதமாக தற்போது அமராவதி குவான்டம் வாலியின் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

50 ஏக்கர் நிலத்தில்... – உலக குவான்டம் தொழில்நுட்பத்திற்கு ஆந்திராவை முன்னிலை படுத்தும் நிகழ்வாக இது உள்ளது. இதன் மூலம் தேசிய குவான்டம் புரட்சிக்கு ஆந்திர மாநிலம் பிள்ளையார் சுழி போட்டுள்ளது. இதற்காக ஆந்திர அரசு அமராவதி தூளூரு பகுதியில் 50 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்துள்ளது. நாட்டின் முதல் 133 க்யூபிட் குவான்டம் கம்ப்யூட்டரை அமராவதிக்கு கொண்டு வர ஐபிஎம், டிசிஎஸ், எல் அண்ட் டி போன்ற நிறுவனங்கள் முக்கிய நிறுவனங்களாக உள்ளன.

குவான்டம் கம்ப்யூட்டிங், குவான்டம் தகவல் தொழில் நுட்பம், குவான்டம் சென்சார், ஏஐ தொழில்நுட்பம், சைபர் செக்யூரிட்டி, ராணுவம், மருத்துவம், கல்வி, நிதித்துறை உள்ளிட்ட முக்கிய துறைகளின் பரிசோதனைகள், தொடக்கங்கள், வளர்ச்சி பணி திட்ட பரிசோதனைகள் இனி இங்கு நடக்கும்.

குவான்டம் வாலி அமைவதன் மூலம் உலகளாவிய பரிசோதனை மையங்கள், க்ளோபல் தொழில்நுட்ப முதலீடுகள், ஸ்டார்ட் அப் எக்கோ சிஸ்டம் விரிவாக்கம், பல லட்சம் இளைஞர்களுக்கு தொழில்நுட்ப பயிற்ச்சிகள், வேலை வாய்ப்புகள் கிடைக்கும். வரும் ஆகஸ்ட் மாதம் இறுதிக்குள் குவான்டம் மைய கட்டிட பணிகள் நிறைவடையும்.

டிசம்பருக்குள்... – டிசம்பர் மாத இறுதிக்குள் குவான்டம் கம்ப்யூட்டரை இங்கு நிறுவ வேண்டும் என ஆந்திர அரசு லட்சியமாக கொண்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள போஸ்டன், சிங்கப்பூர், ஷாங்காய் நகரங்களுக்கு ஈடாக இனி இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் குவான்டம் வாலி இயங்கும் என்பதில் பெருமை கொள்கிறேன் என சந்திரபாபு நாயுடு பேசினார்.

## "திமுக கூட்டணிக்குள் ராமதாஸ் வந்தால் நாங்கள் வெளியேறுவோம்"- திருமாவளவன் உறுதி

**சென்னை,பிப்.9:**

பாமக நிறுவனர் ராமதாஸை கூட்டணியில் சேர்த்தால், திமுக கூட்டணியில் இருந்து நாங்கள் வெளியேறுவதை தவிர வேறு வழியில்லை என விசிக தலைவர் திருமாவளவன் உறுதிபட தெரிவித்துள்ளார்.





இதுதொடர்பாக சென்னையில் தனியார் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது: மதத்தின் அடிப்படையில் வெறுப்பு அரசியலை, சிறுபான்மையினருக்கு எதிராக பரப்புவது பாஜக. அதேபோல் சாதி அடிப்படையில் வெறுப்பு அரசியலை, பட்டியலின மக்களுக்கு எதிராக பரப்புவது பாமக. சோஷயல் இன்ஜினீயரிங் என்ற பெயரில் சமூகங்களுக்கு இடையில் வெறுப்பை விதைத்து, பிரிவினையை ஏற்படுத்தக்கூடிய, நிலையான பகையை வளர்க்கக்கூடிய இந்த இரண்டு கட்சிகளோடு எந்த காலத்திலும் தேர்தல் கூட்டணி வைத்துக்கொள்ள மாட்டோம். இந்த கட்சிகள் இடம்பெறும் அணியிலும் இடம்பெற மாட்டோம் என்ற முடிவை ஏற்கெனவே எடுத்துவிட்டோம். அந்த முடிவை எடுக்கக்கூடிய சுதந்திரமும், உரிமையும், அதிகாரமும் எங்களுக்கு இருக்கிறது.

ஆனால் அதேநேரம் திமுகவுக்கு அழுத்தம் கொடுக்க நாங்கள் விரும்பவில்லை. இவ்விவகாரத்தில் திமுக எடுக்கும் முடிவு எங்களது நிலைப்பாட்டுக்கு எதிராக இருந்தால், நாங்கள் கூட்டணியில் இருந்து வெளியேறுவதை தவிர வேறு வழியில்லை. இதுதான் எங்களின் நிலைப்பாடு. இதில் எந்த சமரசமும் நாங்கள் செய்துகொள்ளவில்லை. அவ்வப்போது வரும் தேர்தலுக்காக நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்ளக் கூடாது. கருத்தியல் சார்ந்த பயணத்தில் நம்பகத்தன்மையை ஒருபோதும் இழந்துவிடக் கூடாது. அதை பாதுகாக்க வேண்டும். அதனடிப்படையில் நாங்கள் எடுத்த நிலைப்பாட்டில் உறுதிப்பாட்டுடன் இருக்கிறோம்.


அதேபோல் இந்த தேர்தலில் புதிதாக பேசப்படக்கூடிய நடிகர் விஜய் தலைமையிலான தவெக கட்சி வெற்றிபெற்று, விஜய் முதல்வராகி விடுவார் என்றெல்லாம் ஒரு தரப்பில் விவாதிக்கப்படுகிறது. என்னதான் புகழ்பெற்ற கதாநாயகன், கதாநாயகி அரசியலுக்கு வந்தாலும் கூட எடுத்த எடுப்பில் அவர்களால் ஆட்சியை கைப்பற்ற முடிந்ததில்லை.

இவற்றை எல்லாம் விஜய்யின் கட்சியோடு ஒப்பிடும் போது, இந்த தளத்தில் அவர் முதல்வராவது உடனே சாத்தியப்படாது. மக்களை சந்தித்து வாக்குகளை சேகரிப்பது, தமக்கு ஆதரவான வாக்காளர்களை கொண்டு வந்து வாக்கு சாவடிகளில் சேர்ப்பது போன்ற நடைமுறைகளில் தவெகவினரால் எந்த அளவுக்கு செயல்பட முடியும் என்பதை நம்மால் உறுதியாக சொல்ல முடியாது. பெரும்பாலும் அவர் ஆட்சியை பிடிக்க வாய்பில்லை.

இந்த தேர்தலில் அதிமுக அணி ஒரு வலுவாக கூட்டணியாக உருவாகவில்லை. நடிகர் விஜய்யின் தவெக இன்னும் ஒரு முழுமையான அரசியல் இயக்கமாக மாறவில்லை. எனவே திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு சாதகமான சூழல் நிலவுகிறது என்று நம்புகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## ஸ்ரீவரசித்தி விநாயகர் கும்பாபிஷேகம்






**திருவண்ணாமலை, பிப்.09:**

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் காந்தி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய ஜீர்ணோத் தாரண மகா அஷ்டபந்தன காலை 5 மணிக்கு கோ பூஜை, புன்ய வாசனம், சங்கல்பம், கலச பூஜையும், 6.40 காலை மஹா பூர்ணாவதி, தீபாராதனை, பவித்ர தானம், கலசம் புறப்பாடு, காலை 7.30 மணிக்கு மஹா கும்பாபிஷேகம், மூலவருக்கும், உற்சவருக்கும் வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டு விநாயக பெருமானை வேண்டி அருள் பெற்றனர். பக்தர்கள் அனைவருக்கும் ஸ்ரீ வாசவி மஹாலில் அன்னதானமும் வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனுக்கு நெய்குளம் தரிசனம், ஐஸ்வர்யா மஹா கௌரி பூஜை





**தஞ்சாவூர், பிப்.09:**

தஞ்சாவூர் வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் தை 4 -ஆம் வெள்ளிக்கிழமையை முன்னிட்டு நெய்குள தரிசனம் மற்றும் ஐஸ்வர்ய மகா கௌரி பூஜையும் மூலவர்க்கும், உற்சவருக்கும் சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பாட்டுக்கள் பாடி ஆர்ய வைஸ்ய ஆண்கள்,பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர்.

பூஜையில் கலந்து கொண்ட பெண்கள் அனைவருக்கும் மஞ்சள், குங்குமம்,லஷ்மி படம், தாம்பூலம் வழங்கப்பட்டது. அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது. பூஜைகள் வெகு சிறப்பாக நடைபெற்றது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## லயன்ஸ் கிளப் ஆப் நாகப்பட்டினம் போர்ட் டவுன் மற்றும் நாகை ஜிம்மி’ஸ் பிஸியோ கிளினிக் இணைந்து மாபெரும் இலவச பிஸியோ தெரபிக் முகாம்



**நாகப்பட்டினம், பிப்.09:**

லயன்ஸ் கிளப் ஆப் நாகப்பட்டினம் போர்ட் டவுன் மற்றும் நாகை ஜிம்மி’ஸ் பிஸியோ கிளினிக் இணைந்து மாபெரும் இலவச பிஸியோ தெரபிக் முகாம் ஆதர்ஷ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 08:02:2026 காலை 9:00 மணி முதல் பகல் 1:00 மணி வரை நடைபெற்றது.

இதில் போர்ட் டவுன் லயன்ஸ் சங்க சாசனத்தலைவர் லயன் ஆடிட்டர் V. அண்ணாமலை முன்னிலை வகிக்க சங்கத்தின் தலைவர் லயன் G.ஆனந்த் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் லயன் Dr N.ஜிம்மி கார்ட்டர் M.P.T(Ortho) தலைமையில் பிசியோதெரபி குழுவினர் பங்கேற்று அனைத்து வகை மூட்டுவலிக்கும் உரிய சிகிச்சை அளித்தனர்.

50 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் முகாமில் பங்கேற்று பயனடைந்தனர். நிகழ்ச்சிக்கான விரிவான ஏற்பாடுகளை பொருளாளர் லயன் V.பரமசுந்தரம், லயன் Er S.தமிழ்ச்செல்வன், லயன் B.சண்முகம் ஆகியோர் செய்திருந்தனர். நிகழ்ச்சியில் சங்க உறுப்பினர்கள் ராமசாமி,கோபு, ரவீந்திரன், ஆறுமுகம், சிவக்குமார், மனோஜ் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். நிறைவாக செயலாளர் லயன் A. ஜெயக்குமார் அவர்கள் நன்றியுரை கூறினார்.

# "வாமனத்தீவு" நூல் வெளியீடு விழா




**திருச்சி, பிப்.09:**

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம், திருவரங்கம் இராசவேலர் செண்பகத்தமிழ் அரங்கு இணைந்து நடத்திய " வாமனத்தீவு" நூல் வெளியீடு விழா தமிழ்ச்சங்க குளிர்மை அரங்கில் நேற்று முன்தினம் (07.02.26) நடைபெற்றது.

திரு.நா.ஆண்டியப்பனின் இந்நூல் தமிழ்மாமணி முனைவர் ப.சுப்ரமணியன் தலைமையில் வெளியிடப்பட முதற்படியை திருமதி.கேத்தரின் ஆரோக்கியசாமி, திரு எம். ஆர்.எஸ்.கேசவன், செல்வி. இரா. பூங்குழலி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

தமிழவேள் பெ.உதயகுமார், திரு.மு.சிதம்பரபாரதி, கவிஞர் பிச்சினிக்காடு இளங்கோ வாழ்த்துரை வழங்கினர்.

முனைவர் மேஜர் மணலி சோமசுந்தரம் நூல் ஆய்வு செய்ய, நா.ஆண்டியப்பன் ஏற்புரை வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னதாக செண்பகத் தமிழ் அரங்கின் இயக்குனர் இராச.இளங்கோவன் வரவேற்புரை ஆற்ற, முனைவர் பத்மபிரியா, முனைவர் அ.இலாவண்யா இணைப்புரை வழங்க, முனைவர் செயலாபதி நன்றி நவில விழா இனிதே நிறைவடைந்தது.

**ஸ்ரீகாந்த் திருச்சி**

# இடைக்காட்டூரில் ஜல்லிக்கட்டு-40 வீரர்கள் காயம்



**மானாமதுரை,பிப்.09:**

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியம் இடைக்காட்டூரில் கோயில் திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற ஜல்லிக்கட்டில் சீறிப்பாய்ந்த காளைகளை அடக்க முயன்ற 40 வீரர்கள் காயமடைந்தனர். இடைக்காட்டூர் வள்ளி தெய்வானை சமேத பாலமுருகன் கோயில் குடமுழுக்கு விழாவை முன்னிட்டு சிவகங்கை கே.டி.ஆர் குழுமம் சார்பில் ஜல்லிக்கட்டு நடைபெற்றது

பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் கொண்டுவரப்பட்ட 730 காளைகள் ஜல்லிக்கட்டில் அவிழ்த்து விடப்பட்டன. 330 மாடுபிடி வீரர்கள் காளைகளை அடக்க அணி அணியாக பங்கேற்றனர்.

வாடிவாசலிலிருந்து சீறிவந்த காளைகளை மாடுபிடி வீரர்கள் அடக்கினர். காளைகளை அடக்கிய வீரர்களுக்கும் அடங்க மறுத்த காளைகளின் உரிமையாளர்களுக்கும் கே.டி.ஆர் குழுமம் சார்பில் டைனிங் டேபிள், சில்வர் அண்டா, டைனிங் டேபிள், பீரோ, டிரெஸ்ஸிங் டேபிள் உள்ளிட்ட ஏராளமான பொருள்கள் பரிசாக வழங்கப்பட்டது.

சிறந்த காளைகளுக்கும் சிறந்த மாடுபிடி வீரர்களுக்கும் இரு சக்கர வாகனங்கள் பரிசு வழங்கப்பட்டது. ஜல்லிக்கட்டில் காளைகளை அடக்க முயன்ற 40 மாடுபிடி வீரர்கள் காயமடைந்தனர் இவர்களுக்கு அங்குள்ள மருத்துவக் குழுவினர் முதலுதவி சிகிச்சையளித்தனர்.

பலத்த காயமடைந்த வீரர்கள் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். ஜல்லிக்கட்டு மைதானத்தைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த கேலரியில் ஏராளமான உட்கார்ந்து ஜல்லிக்கட்டை கண்டுரசித்தனர்.

# தூய்மை பணியாளருக்கு மாலை அணிவித்து பாராட்டிய காவல் ஆய்வாளர்






**திருவாரூர், பிப்.09:**

பல லட்சம் மதிப்பிலான வெள்ளி தங்க நகைகளை காவல் நிலையத்தில் ஒப்படைத்த தூய்மை பணியாளருக்கு பாராட்டு குவிந்து வருகிறது.

திருவாரூர் மாவட்டம் திருவாரூர் பகுதியைச் சேர்ந்த துரை என்ற திருவாரூர் நகராட்சியை சேர்ந்த தூய்மை பணியாளர் இன்று காலையில் தூய்மை பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது 20 பவுன் நகை மற்றும் முக்கால் கிலோ வெள்ளி அடங்கிய பை ஒன்றை பார்த்தார் அதனை உடனடியாக திருவாரூர் நகர காவல் நிலையத்தில் ஒப்படைத்தார் இந்த நிலையில் சென்னையில் இருந்து திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஆலத்தம்பாடி பகுதியில் உள்ள உறவினர் வீட்டு கிரகப்பிரவேசத்திற்கு ராதாகிருஷ்ணன் அவரது குடும்பத்தினர்கள் இன்று அதிகாலை ரயிலில் திருவாரூர் வந்து அங்கிருந்து ஆட்டோவில் திருவாரூர் நகர் பகுதியில் உள்ள தன்னுடைய உறவினர் வீட்டில் குளித்து பிரஷ் அப் ஆகிவிட்டு மீண்டும் அதே ஆட்டோவில் கிரக பிரவேசத்திற்கு சென்று உள்ளார்கள். ஆனால் அங்கு பார்த்தால் அவர் வாங்கி வந்த 20 பவுன் தங்க நகைகள் மற்றும் முக்கால் கிலோ வெள்ளி பொருட்கள் காணவில்லை உடனடியாக திருவாரூர் நகர காவல் நிலையத்தில் வந்து புகார் அளித்துள்ளார். அதற்கு முன்னதாகவே தூய்மை பணியாளர் துரை தங்க மற்றும் வெள்ளி பொருட்களை திருவாரூர் நகர காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார். திருவாரூர் தியாகராஜர் கோவில் அருகில் உள்ள வீதியில் தூய்மை பணியில் ஈடுபட்டிருக்கும் பொழுது துரை அந்த தங்க மற்றும் வெள்ளி பொருட்கள் அடங்கிய நகை பையை பார்த்து அதனை எடுத்து திருவாரூர் நகர காவல் நிலையத்தில் கொடுத்துள்ளார். இதனால் மனமகிழ்ந்த ராதாகிருஷ்ணன் குடும்பத்தினர் துரையை அழைத்து நன்றி தெரிவித்தார்கள் மேலும் திருவாரூர் நகர காவல் நிலைய காவல் ஆய்வாளர் துரைக்கு மாலை அணிவித்து பாராட்டு தெரிவித்துள்ளார் இந்த நெகிழ்ச்சியான சம்பவம் திருவாரூரில் அரங்கேறி உள்ளது

## மானாமதுரை நாகநாதர் கோவில் மகா கும்பாபிஷேகம் பக்தர்கள் வழிபாடு





**மானாமதுரை, பிப்.09:**

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ராம் நகரில் பழமை வாய்ந்த நாகநாதர் கோவிலில் சில மாதங்களாக திருப்பணி முடிந்ததை தொடர்ந்து கணபதி ஹோமத் து டன் யாகசாலை பூஜைகள் துவங்கின. நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9:15 மணியிலிருந்து 10:15 மணிக்குள் பூஜிக்கப் பட்ட புனித நீர் அடங்கிய கடங்களை அர்ச்சகர்கள் ஊர்வலமாக கொண்டு சென்று புனித நீரை ஊற்றி கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தனர். ஏற்பாடுகளை விழா கமிட்டியினர், பக்தர்கள் செய்து வருகின்றனர். சிறப்பு அன்னதானம் நடைபெற்றது.

## புதுகை முத்தமிழ் சங்கம் முப்பெரும் விழா



புதுக்கோட்டை முத்தமிழ் சங்கத்தின் நூல் வெளியீடு மற்றும் விருது வழங்கும் விழாவில் கவிஞர் கே.எஸ் ரவிச்சந்திரன், இல.ரவி,எழுத்தாளர் குடந்தை பரிபூரணன் ஆகியோர் கலந்து கொண்டு பொன்னாடை அணிவித்து சிறுகதை நூல் பரிசளித்தனர்.

## சீர்காழியில் அனைத்து வசதிகளுடன் புதிதாக நிரா மருத்துவமனை திறப்பு விழா




**சீர்காழி , பிப். 09 :**


மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பழைய பேருந்து நிலையம் அருகே தேர் வடக்கு வீதியில் தங்கம் டாக்டர்ஆர். ராஜசெல்வன் - டாக்டர் எம்.நிவேதா ( பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் மகள்) இவர்களின் அனைத்து மருத்துவ பயனாளிக்கு அனைத்து விதமான மருத்துவ சேவைகளையும் அனைத்து வசதிகளுடன் 24 மணி நேரமும் மருத்துவ சேவைகள் வழங்கும் நிரா மருத்துவமனை புதிதாக திறக்கப்பட்டது.

தி.மு.க மண்டல செயலாளர் கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் நகர் பகுதி மற்றும் குடிநீர் வழங்கல் அமைச்சர் கே.என்.நேரு , பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மருத்துவமனையை திறந்து வைத்தார்கள்.

திறப்பு விழாவில் மயிலாடு துறை முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் ஜெகவீரபாண்டியன், தி.மு.க. மயிலாடுதுறை மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் இரா.தனராஜ் சமூக ஆர்வலர் அப்பர் சுந்தரம், தி.மு.க. சீர்காழி நகர பொருளாளர் கோடங்குடி சங்கர். சீர்காழி விஜய் சுபம் பெனிபிட் பண்ட் நிதி லிட் நிர்வாக இயக்குனர் கியான்சந்த் ஜெயின், சீர்காழி சுபம் வித்யா மந்திர் பள்ளியின் தாளாளர் சுதேஷ், கழக வழக்கறிஞர் எஸ்பி. நெடுஞ்செழியன் கலந்து கொண்டு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

# திருச்சினமுடைய அய்யனார் பத்திரகாளி அம்மன் கோவில் மாசிகளரி விழா தொடங்கியது







**பார்த்திபனூர், பிப்.09:**

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தாலுகா பார்த்திபனூர் வழி நெல்மடூர் ஊராட்சி, கவிராயர் புளியங்குளம் கிராமத்தில் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ திருச்சினமுடைய அய்யனார் 21 பந்தி, 61 சேனை கொண்ட ஸ்ரீ பத்திரகாளியம்மன் திருக்கோவில் மாசி களரி திருவிழா காப்பு கட்டுதல் நிகழ்ச்சியுடன் தொடங்கியது . காலை 10.30-11.30 மணிக்கு பக்தர்கள் காப்பு கட்டுதல் நிகழ்ச்சியுடன் தொடங்கியது. முன்னதாக திருவிழா பந்தல்கால் நடும் பூஜை வழிபாடு நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து பத்திர காளி அம்மன் சன்னதி முன்பு ஏராளமான பக்தர்கள் கையில் மஞ்சள் காப்பு கட்டி விரதத்தை தொடங்கினார்கள். முக்கிய நிகழ்ச்சி சிவன்ராத்திரி அன்று பச்சாலைப் பயிர்கள் பரப்பப்படும் 15.02.2026 மாசி 3 ஞாயிறு மாலை 5.49 மணிக்கு அமாவாசை பூஜை ஆரம்பம் 16.02.2026 மாசி 4 திங்கள் பகல் 5.55 மணி அமாவாசை முடிவு வரும் 17.02.2026 மாசி 5 செவ்வாய் 18.02.2026 மாசி 6 புதன்கிழமை பாரி வேட்டை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அன்று மாலை 4.30-இரவு 7.00 மணி உருண்டு கொடுத்தல் இரவு 7.00 - 11.00 மணி வரை அன்னதானம் நடைபெறுகிறது. இரவு 8.00 மணி வள்ளி திருமணம் நாடகம் நடைபெறுகிறது.

இரவு 7.00-12.00 மணி வரை தீச்சட்டி, முடி இறக்குதல், காது குத்துதல், கரும்பு தொட்டில் எடுத்தல் இரவு 12.00 மணி சுவாமி வேட்டைக்குப் புறப்படுதல் நள்ளிரவு 2.00-3.00 மணி கிடாய் வெட்டுதல், தீபாராதனை நடைபெறுகிறது.

மாசிகளரி விழா ஏற்பாடுகளை நிர்வாகத் தலைவர் உ.மணி ஐயா மற்றும் கோவில் குடிமக்கள் செய்து வருகின்றனர்.


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருட்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250–Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 – Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


S.R
Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


Breaking News Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
999 ONLY


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY OR SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale ...
Residential / Commercial ...
Plots
Flats
House
Villa
Bungalows
Farm Land
Ware Houses
Factory Sites
Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


CUSTOMIZED MLM SOFTWARE
STARTS WITH
Rs.9999*
ONLY
BINARY PLAN
GENERATION PLAN
SINGLE LEG PLAN
MATRIX PLAN
CRYPTOCURRENCY
CONTACT
9445242169


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 % OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC - INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

# கவிதை அரங்கம்!







விழுவதற்கு உன்
கால்கள் முடிவு
செய்தால் எழுந்து
ஓடுவதற்கு உன்
மனதை தயார் செய்

ஒரு நொடி துணிந்தால்
வாழ்க்கையை முடித்து
விடலாம், ஒவ்வொரு
நொடியும் துணிந்தால்
அதே வாழ்க்கையை
ஜெயித்து விடலாம்
எந்த போராட்டமும்
இல்லை என்றால்
வெற்றியும்
உனக்கு இல்லை

வலிமை வெற்றியினால்
வருவதல்ல வெற்றிக்கான
போராட்டத்தினால் வருவது

தோல்வியிலும்
தொடர் முயற்சியை
மேற்கொள்பவர்களுக்கே
வெற்றி சாத்தியம்

## வாழ்க்கை தத்துவம்...



மழை வராத வானமும்
காய்ந்து போகாத மனமும்
இரண்டுமே நிலைத்திராது

சிரிப்பின் பின்னாலே
ஆயிரம் கதைகள் மறைந்திருக்கும்

நேரம் யாருக்காகவும் நின்றதில்லை
அதனால் நாம்
ஓட கற்றுக் கொள்ள வேண்டும்

தொடங்காமல் வெற்றி இல்லை
விடாமுயற்சியில் தோல்வி இல்லை

நேற்று காயம் தந்தாலும்
இன்று அதை மறைக்க
சூரியன் உதயமாகிறான்

வாழ்க்கை சோதனைகள்
நம்மை உடைக்க அல்ல
உருவாக்க தான்

# சில்லறை பாக்கி



'பிஸ்கெட் பாக்கெட், பழங்கள் ,மறக்காமல் வாட்டர் பாட்டில் வாங்கி வைத்து கொண்டேன். 'பஸ்ஸில் கூட்டம் அதிகமாக இல்லை. நேரம் ஆக ஆக பஸ்ஸில் கும்பல் கூடி கொண்டிருந்தது.3 மணி நேர பிரயாணம் திருச்சி டு விழுப்புரம். சில மணி நேரம் கவலைகளை மறந்து வித வித மான மனிதர்களை கண்கள் பார்த்ததில் மனதில் ஒரு விதமான மகிழ்ச்சி. 'நின்றிருந்த சிலர் உட்கார இடம் கிடைக்காமல் இடம் கொடுக்கும்மாறு சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். ஊர் நெருங்குகிற வரைக்கும கர்ப்பிணிகளோ, குழந்தையை தூங்கி கொண்டு இருப்பவர்களோ யாராக இருந்தாலும் உட்கார இடம் கொடுக்க மனம்வராமல் கல் நெஞ்சோடு உட்காந்து கொண்டு இருந்தனர். 'குழந்தைகளின் புஸ்தகப்பை தலையில் இடிக்கிறது என்று உட்காந்து இருக்கிறவர்கள் குழந்தைகளை இரக்கம் இல்லாமல் தள்ளி கொண்டு இருந்தனர்.. 'கண்டக்டர் டிக்கட் கொடுத்து விட்டு சில்லறை பாக்கியை டிக்கெட்டில் எழுதி கொடுத்து விட்டு போனதை பையில் பத்திரமாக வைத்துக் கொண்டேன். 'பூக்காரம்மா பஸ்ஸிலும் பூக்களைதொடுத்து வயதான காலத்தில் விற்பனை செய்த போது அந்தம்மாவை மனதார பாராட்டினேன். 'இன்னும் 10 நிமிஷத்தில் விழுப்புரம் வந்து விடும் என்று அறிவிப்பு கொடுக்க இளம் வயது பெண் ஒருவர் அழகியகுழந்தை யை தூக்கி கொண்டு இருந்த போது தோளில் இருந்த குழந்தை மிருதுவாக என்னை தொட்டு சிரித்த போது என் உடம்பு சிலிர்த்துகொள்ள அந்தபெண்ணுக்கு எழுந்து இடம் கொடுத்ததில் நான் வாங்க வேண்டிய சில்லறை வாங்கும் போது ஊர் நெருங்கி விட்டது. 'நான் இறங்கும் போது கண்டக்டர் கத்திகொண்டு இருந்தார்சரியான சாவு கிராக்கியா வர்றாங்க. அவர் திட்டியது காதில்விழுந்தாலும் ரோஜாப்பூவான குழந்தையின் சிரிப்பே மனதில் சந்தோஷமாக நிறைந்து இருந்தது.'

**ஐயந்தி சிவக்குமார்**
திருச்சி



## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!

*கிளாஸ்ல ஃபர்ஸ்ட் உங்க மகன் தான்ங்க!*

*அப்படியா, ரொம்ப சந்தோஷம் சார்!*

*நீங்க வேற... பெல் அடிச்சதும் அவன் தான் வகுப்பிலேருந்து முதல்ல வெளியேறுவான்.*



# தினம் ஒரு சமையல்



## ஆட்டு ஈரல் கிரேவி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| எண்ணெய் | -2 டேபிள் ஸ்பூன் |
| கொத்தமல்லி விதைகள் | -2 டேபிள் ஸ்பூன் |
| சீரகம் | -1/2 ஸ்பூன் |
| சோம்பு | -1/2 ஸ்பூன் |
| மிளகு | -2 டீஸ்பூன் |
| கசகசா | -1/2 டீஸ்பூன் |
| பட்ட மிளகாய் | -2 |
| கறிவேப்பிலை | -1 கொத்து |

கிரேவி செய்ய தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| எண்ணெய் | -3 டேபிள் ஸ்பூன் |
| பெரிய வெங்காயம் | -2 |
| தக்காளி | -2 |
| இஞ்சி பூண்டு பேஸ்ட் | -1 டேபிள் ஸ்பூன் |
| ஆட்டு ஈரல் | -400 கிராம் |
| மஞ்சள் தூள் | -1 டீஸ்பூன் |
| உப்பு | -2 ஸ்பூன் |
| கரம் மசாலா | -1/2 ஸ்பூன் |
| கொத்தமல்லி இலை | -1 கைப்பிடி |

செய்முறை:



முதலில் மசாலா அரைக்க தேவையான பொருட்கள் அனைத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுப்பில், ஒரு பாத்திரத்தை வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி, எண்ணெய் சூடானதும் தேவையான பொருட்கள் ஒவ்வொன்றாக சேர்த்து, சிவரும்வரை வறுத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

இதனை சிறிது நேரம் ஆறவைத்து, ஒரு மிக்ஸி ஜாரில் சேர்த்து. சிறிதளவு தண்ணீர் ஊற்றி பேஸ்டாக அரைத்து ஒரு கிண்ணத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இப்போது, அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி, எண்ணெய் சூடானதும் அதில் பொடியாக நறுக்கிய வெங்காயத்தை சேர்த்து பொன்னிறமாக வரும் வரை வதக்க வேண்டும்.


வெங்காயம் பொன்னிறமாக மாறியதும், அதில் இஞ்சி பூண்டு சேர்த்து வதக்க வேண்டும். அடுத்து தக்காளியை அரைத்து சேர்த்து நன்றாக கலந்து வதக்க வேண்டும்.

வதங்கியதும், அதில் சசுத்தம் செய்து வைத்துள்ள ஆட்டு ஈரலை சேர்த்து, 2 டீஸ்பூன் உப்பு மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து நன்றாக கலந்து விட வேண்டும்.

அடுத்து, அரைத்து வைத்துள்ள மசாலா மற்றும் கரம் மசாலா சேர்த்து நன்கு, தேவையான அளவு தண்ணீர் சேர்த்து, இந்நிலையில் உப்பு சரிபார்த்து, உப்பு தேவைப்பட்டால் சேர்த்து நன்கு கலந்து 15 நிமிடம் வரை வேகவைக்கவும்.

அதன் பிறகு, கொத்தமல்லி இலைகளை தூவி இறக்கினால் சுவையான வாசனையான ஆட்டு கிரேவி தயார்.!

## மகிழம் பயன்கள்



இன்றைய பதிவில் மகிழம் பூ நன்மைகள் பற்றி பார்க்க போகிறோம். மகிழம் பூ அதிக நறுமணத்தை கொண்டுள்ளது. இது அதன் நறுமணம் மட்டும் இல்லாமல் பல மருத்துவ தன்மையை கொண்டுள்ளது. இந்த வகை பூ அதிகமாக சிவன் கோவில்கள், பூங்கா போன்ற இடங்களில் வளர்க்கப்படுகின்றனர். இதன் பூ, காய் , வேர் ,பட்டை மற்றும் விதை இவை அனைத்தும் மருத்துவகுணம் கொண்டுள்ளது. மகிழம்பூ ஆங்கிலத்தில் மிமிசோப்ஸ் இலாங்கி என்ற மற்றோரு பெயரும் உண்டு. இந்த பூவில் இருந்து வாசனை திரவியங்கள் தயாரிக்கபடுகின்றன. மகிழம் பூ தலைவலி , உடல் உஷ்ணம், கழுத்து மற்றும் தோல்பட்டை வலியை, பசியின்மை மற்றும் மன அழுத்தம் போன்றவற்றை சரிசெய்வதற்கும் அறிவுத்திறனை மேம்படுத்துவதற்கும் உதவுகிறது. இப்போது நாம் மகிழம் பூவின் மருத்துவ பயன்கள் பற்றி பார்க்கலாம் வாங்க.

மகிழம் மரத்தின் இருக்கும் இரண்டு பிஞ்சு காய்களை எடுத்து வாயில் போட்டு மென்று துப்பிவிட்டு வெந்நீரில் வாய் கொப்பிளித்து வந்தால், பல் ஆடுவது,பல் வலி மற்றும் பல் சம்மந்தபட்ட பிரச்சனைகள் குணமாகும். இதனை 15 நாட்கள் அல்லது ஒரு மாதத்திற்கு ஒரு முறை செய்து வருவதன் மூலம் பல் சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் முற்றிலும் குணமாகும்.

# D55 பூஜைக்காக நடிகர் தனுஷ் அணிந்துவந்த வாட்ச் விலை எவ்வளவு தெரியுமா?




இந்த படத்தின் பூஜை கடந்த வெள்ளிக்கிழமை கோலாகலமாக நடந்தது.

இந்த பட பூஜையில் வழக்கம் போல் தனுஷ் வேட்டை சட்டையில் மிகவும் சிம்பிளாக வந்திருந்தார்.

அந்த பூஜையின் போது தனுஷ் கட்டியிருந்த வாட்சின் விலை குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

அமரன் பட வெற்றியை தொடர்ந்து ராஜ்குமார் பெரியசாமி தனுஷை வைத்து புதிய படம் இயக்க உள்ளார். தற்காலிகமாக இப்படத்திற்கு D55 என பெயரிட்டுள்ளனர்.

தனுஷுடன் ஸ்ரீலீலா, சாய் பல்லவி, மம்முட்டி ஆகியோர் கமிட்டாகி உள்ளனர். வுண்டர்பார் ஃபிலிம்ஸ், ஆர்.டேக் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரிக்கும் இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைக்கிறார்.

இந்த வாட்ச் படேக் பிலிப் க்யூபிட்ஸ் ரக வாட்ச், இதில் 18 கேரட் ரோஸ் கோல்டு, ஸ்கிராட்சஸ் வராத அளவுக்கு ஸ்டெயின்லெஸ் ஸ்டீலை பயன்படுத்தி வாட்ச் செய்துள்ளார்களாம்.

இந்த வாட்ச் விலை தற்போதைய மார்க்கெட் விலைப்படி ரூ. 90 லட்சம் என கூறப்படுகிறது.

## சினிமா



சாரா அர்ஜுன் சேலையில் அழகாக போஸ் கொடுத்து இருக்கும் புகைப்படங்களை வெளியிட்டு இருக்கிறார். இதோ பாருங்க.

# செம ஹிட்டடித்த தலைவர் தம்பி தலைமையில் படத்தின் OTT ரிலீஸ் தேதி... வெளிவந்த தகவல்




தலைவர் தம்பி தலைமையில்

2026வது வருடம் பொங்கல் ஸ்பெஷலாக ஜனவரி 9ம் தேதி தமிழில் வெளியான திரைப்படம் தலைவர் தம்பி தலைமையில்.

நடிகர் ஜீவாவின் 45வது படம் நிதிஷ் சகாதேவ் இயக்கத்தில் உருவாகி இருந்தது.

ராவண கோட்டம் படத்தை தயாரித்த கண்ணன் ரவி தயாரித்துள்ள இப்படத்தில் ஜீவாவை தாண்டி தம்பி ராமையா, இளவரசு, பிராதனா நாதன், ஜென்சன் திவாகர் உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர்.

பொங்கலையொட்டி வெளியான பராசக்தி, வா வாத்தியார் படங்களை பின்னுக்குத் தள்ளி ஜீவாவின் தலைவர் தம்பி தலைமையில் படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

திரையரங்குகளில் மாஸ் வெற்றியடைந்த அரசியல் கலந்த நகைச்சுவை படமான தலைவர் தம்பி தலைமையில் படத்தின் ஓடிடி ரிலீஸ் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அதன்படி, தலைவர் தம்பி தலைமையில் படம் வருகிற பிப்ரவரி 12ம் தேதி நெட் ஃபிளிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியாக உள்ளதாம்.

# பாவங்களை போக்கும் பரணி தீபம்!





கார்த்திகை மாதம் முழுவதும் வீடுகளில் விளக்கேற்றும் முறை நமது தமிழகத்தில் இருந்து வருகின்றது. கார்த்திகை மாதம் கிருத்திகை நட்சத்திரத்தில் கார்த்திகை தீபம் கொண்டாடப்படுகிறது.

இனிய சிவபெருமானின் பஞ்சபூத தலங்களில் அக்னித் தலமாக விளங்கும் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் கார்த்திகை தீப திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றது.

அன்று அதிகாலை 4 மணி அளவில் கோயில் மூலவர் சன்னதியில் பரணி தீபம் ஏற்றப்படும். தொடர்ந்து மாலை 6 மணி அளவில் அண்ணாமலையார் கோவில் பின்புறம் உள்ள 2,668 அடி உயரம் கொண்ட மலையின் மீது மஹாதீபம் ஏற்றப்படும்.

## பரணி தீபம் ஏற்றும் முறை

திருக்கார்த்திகைக்கு முந்தைய நாளான பரணி நட்சத்திரத்தன்று இல்லங்களிலும், இறைவன் சந்நிதியிலும் மாலை விளக்கேற்றி வழிபட வேண்டும்.
அன்று வாசலில் 2 தீபங்களும், பூஜை அறையில் 5 தீபங்களும் ஏற்ற வேண்டும். இந்த 5 தீபங்களையும் வட்டமாக எல்லா திசைகளிலும் வெளிச்சம் படும்படி ஏற்ற வேண்டும். நெய் ஊற்றி விளக்கு ஏற்றினால் இன்னும் சிறப்பு.

மண் விளக்குகளை வீட்டின் வாசல் படிகளில், படிக்கு மூன்று வீதம் ஏற்றி வைப்பது மரபு. வீட்டில் நல்லெண்ணெயிலும், முருகனுக்கு இலுப்பெண்ணெயிலும் விளக்கேற்றி வழிபடுவது நல்லது.

நம் வீட்டு பூஜையறையில் ஒரு முக தீபம் ஏற்றினால் மத்திம பலன் தரும். இரண்டு முக தீபம் ஏற்றினால் குடும்பம் ஒற்றுமை தரும். மூன்று முக தீபம் ஏற்றினால் புத்திர சுகம் தரும். நான்கு முக தீபம் ஏற்றினால் பசு, பூமி சுகம் தரும். ஐந்து முக தீபம் ஏற்றினால் செல்வம் பெருகும் என்பது ஐதீகம்.

சரணம் சரணம் அகிலம் காக்கும் தந்தை அண்ணாமலையார் பொற்பாதங்கள் சரணம்!
சிவாய நம
சிவமே தவம்
சிவனே சரணாகதி
சித்தமெல்லாம் நமக்கு சிவ மயமே!



**ப.கோபிபச்சமுத்து**
பாரதியார் நகர்,
கிருஷ்ணகிரி - 1

# தினம் ஒரு தலைவர்கள் பகத் சிங் வரலாறு

பகத் சிங் மார்ச் 23, 1931 இந்தியாவின் விடுதலைப் போராட்ட வீரரும் இந்திய விடுதலை இயக்கத்தில் ஒரு குறிப்பிடத்தக்க புரட்சியாளரும் ஆவார். இக்காரணத்திற்காக இவர் சாஹீது பகத் சிங் என அழைக்கப்பட்டார். சாஹீது என்றால் மாவீரர் எனப் பொருள்படும். இவரை இந்தியாவின் முதலாவது மார்க்சியவாதி எனவும் சில வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடப்படுவதுண்டு.

பகத் சிங் இந்தியாவில் பிரித்தானிய ஆட்சிக்கெதிராகப் போராடிய குடும்பமொன்றில் பிறந்தார். இளம் வயதிலேயே ஐரோப்பியப் புரட்சி இயக்கங்களைப் பற்றி படிக்கத் தொடங்கி பொதுவுடமைக் கொள்கைகளின்பால் ஈர்க்கப்பட்டார். பல புரட்சி இயக்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, விரைவிலேயே இந்துஸ்தான் குடியரசு அமைப்பு என்ற புரட்சி அமைப்பின் தலைவர்களில் ஒருவரானார். 63 நாட்கள் சிறையில் இருந்தபோது ஏனைய பிரித்தானியக் கைதிகளுக்கு இணையாக இந்தியக் கைதிகளுக்கும் சம உரிமை பெறுவதற்காக உண்ணாநோன்பு இருந்ததில் இவரது செல்வாக்கு மக்களிடையே அதிகரித்தது.

பகத் சிங்,முதுபெரும் காங்கிரஸ் தலைவர் லாலா லஜபதி ராய் என்பவரின் இறப்புக்குக் காரணமாயிருந்த காவலதிகாரியைச் சுட்டுக் கொன்ற குற்றத்திற்காக 24 வயதில் தூக்கிலிடப்பட்டார். இந்நிகழ்வானது மேலும் பல இளைஞர்களை இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடவும் சோசலிசக் கொள்கைகள் இந்தியாவில் பரவவும் வழிவகுத்தது.[6] பகத் சிங் தூக்கில் இடுவதுற்கு முன் தன் தந்தைக்கு அவர் ஏன் கடவுள் மறுப்பு கொண்டவராக மாறினார் என்பதைக் கடிதம் மூலம் தெரிவித்தார். அக்கடிதம் பின்னர் WHY I AM AN ATHEIST என்ற பெயரில் நூலாக வெளிவந்தது. தமிழில் இந்நூல் நான் ஏன் நாத்திகன் ஆனேன் என்ற பெயரில் ப. ஜீவானந்தம் மொழிபெயர்ப்பில் வெளியானது.
இளமை பகத் சிங் பஞ்சாபில் உள்ள லாயல்பூர் மாவட்டத்தில், பங்கா என்னும் கிராமத்தில் சர்தார் கிசன் சிங், வித்தியாவதி ஆகியோருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். அவரது பிறந்தநாள் அவர் தந்தை மற்றும் அஜித் சிங், சுவரன் சிங் ஆகிய அவரது இரு மாமன்கள், சிறையிலிருந்து வெளியான நாளாக அமைந்தது. இவர் விடுதலைப்போராட்ட வீரர்களைக் கொண்ட சீக்கியக் குடும்பத்தில் பிறந்ததால் இளம் வயதிலே நாட்டுப்பற்று மிக்கவராக வளர்ந்தார். இவரது குடும்பத்தினர் சிலர் பஞ்சாபின் ரஞ்சித் சிங் மன்னரின் இராணுவத்தில் பணியாற்றியவர்கள். இவரது தாத்தா அர்ஜுன் சிங், சுவாமி தயானந்த சரஸ்வதியின் இந்து சீர்திருத்த இயக்கமான ஆர்ய சமாஜைப் பின்பற்றுபவராக இருந்தார். இது இளம் பகத்சிங்கின் மேல் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது. பகத்சிங்கின் தந்தை மற்றும் மாமாக்கள், கர்தார் சிங் சரப் மற்றும் ஹர்தயாள் ஆகியோர் வழி நடத்திய கதர் கட்சியில் உறுப்பினர்களாக இருந்தனர். அஜித் சிங், தன்மீது பாக்கியிருந்த நீதிமன்ற வழக்குகளின் காரணமாக, பெர்சியாவிற்கு தப்பிச்செல்லக் கட்டாயப்படுத்தப்பட்டார். இவரது சிற்றப்பா அஜித் சிங், பஞ்சாப் சிங்கம் என்று அழைக்கப்பட்ட லாலா லஜ்பத் ராயின் அரசியல் வழிகாட்டியாக இருந்தவர்.

பகத்சிங் தன் வயதை ஒத்த பல சீக்கியர்களைப் போல பகத்சிங் கல்சா உயர்நிலைப்பள்ளிக்கு செல்லவில்லை. ஏனென்றால், அப்பள்ளி அலுவலர்கள் ஆங்கிலேயர்கள் மீது காட்டிய விசுவாசம் அவரது தாத்தாவிற்கு பிடிக்கவில்லை. ஆதலால் அவர் ஓர் ஆரிய சமாஜ பள்ளியான தயானந்த் ஆங்கிலோ வேதிக் உயர்நிலைப்பள்ளியில் சேர்க்கப்பட்டார்.
1919-இல், பகத்சிங்குக்கு பன்னிரெண்டு வயதாகும்போது, ஜாலியன்வாலா பாக் படுகொலை நடந்த சில மணி நேரங்களில் அந்த இடத்தைப் பார்வையிட்டார். தனது பதினான்காம் வயதில் 1921ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20-ஆம் தேதியன்று குருத்வாரா நானா சாஹிபில் பல ஆயுதமற்ற மக்கள் கொல்லப்பட்டதை எதிர்க்க போராட்டக்காரர்களை வரவேற்றார். பகத்சிங் இளைய புரட்சி இயக்கத்தில் (YOUNG REVOLUTIONARY MOVEMENT) இணைந்து அகிம்சைக்கு மாறாக தாக்குதல் நடத்தி ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து வெளியேற்ற முனைந்தார்.
1923-இல், பகத்சிங் லாகூரில் உள்ள தேசிய கல்லூரியில் சேர்ந்தார். அப்பள்ளியில் நாடகக்குழுவினர் சங்கத்தில் இடம்பெற்றிருந்தார். அதே ஆண்டில், பஞ்சாப் ஹிந்தி சாஹித்ய சம்மேலன் நடத்திய கட்டுரைப் போட்டியில் பஞ்சாப்பின் பிரச்சனைகளைப் பற்றி எழுதி வெற்றி பெற்றார்.
மார்ச் 1926-இல் நவஜவான் பாரத சபாவை (ஹிந்தியில் இந்தியாவின் இளைஞர்கள் சங்கம்) நிறுவினார். ஒரு வருடம் கழித்து அவர் தன் குடும்பத்தினர் தனக்கு திருமணம் செய்து வைப்பதை தவிர்க்க அவர் தன் வீட்டிலிருந்து கான்பூருக்கு சென்றுவிட்டார். அவர் விட்டுச் சென்ற கடிதத்தில், தனது வாழ்க்கை தாய்நாட்டின் சுதந்திரத்திற்காக அர்பணிக்கவேண்டும் என்ற உயரிய நோக்கத்தை கொண்டுள்ளது என்றும் அதனால் தன்னை வேறு எந்த வாழ்வியல் ஆசைகளும் ஈர்க்காது என்றும் குறிப்பிட்டிருந்தார்.
பகத்சிங்கின் தாக்கம் இந்திய இளைஞர்களுக்கு தெம்பேற்றுவதைப் பார்த்து மே 1927-இல் பகத்சிங்கை ஆங்கிலேய அரசு முந்தைய ஆண்டு அக்டோபரில் நடந்த குண்டு வெடிப்பில் அவருக்கு தொடர்பு இருக்கிறது என்று குற்றம் சுமத்திக் கைது செய்தது. பிறகு அவர் ஐந்து வாரங்களுக்குப் பின் விடுதலை செய்யப்பட்டார்.
பகத்சிங் அம்ரித்சரிலிருந்து வெளியான உருது, பஞ்சாபி நாளிதழ்களில் எழுத்துப் பணியும் தொகுப்புப் பணியும் செய்தார். மேலும் அவர் கிர்டி கிசான் கட்சியின் (தொழிலாளர்கள் மற்றும் உழவர்கள் கட்சி) கிர்டி என்னும் பத்திரிக்கைக்கும் பங்களித்தார். செப்டம்பர் 1928-இல் அக்கட்சி அகில இந்திய புரட்சியாளர்கள் சந்திப்பொன்றை நடத்தியது. அதற்கு பகத்சிங்கே செயலராக இருந்தார். பின்பு அச்சங்கத்தின் தலைவரகாவும் உருவெடுத்தார்.



பிந்தைய புரட்சி நடவடிக்கைகள் லாலா லஜபதி ராயின் மரணமும் சாண்டர்சின் கொலையும் 1928-இல், ஆங்கிலேய அரசு இந்தியாவின் அரசியல் நிலைமையைப் பற்றி அறிக்கையளிக்க சைமன் ஆணையக்குழுவை நிறுவியது. ஆனால், இக்குழுவில் ஒரு இந்திய உறுப்பினர் கூட இல்லாததால் இந்திய அரசியல் கட்சிகள் அனைத்தும் இதனைப் புறக்கணித்தன. அவ்வாணையம் 30 அக்டோபர் 1928-இல் லாகூர் வந்தபோது அவ்வாணையத்திற்கு எதிராக லாலா லஜபதி ராய் அற வழியில் ஒரு அமைதியான அணிவகுப்பை நடத்திச் சென்றார். ஆனால், காவல் மேலதிகாரி ஜேம்ஸ் ஏ ஸ்காட் காவலர்களைத் தடியடி நடத்த ஆணையிட்டதோடு மட்டுமல்லாமல் தானாகவே லாலா லஜபதி ராயைத் தாக்கினார். இத்தாக்குதலில் லஜபதி ராய் கடுமையாகக் காயமுற்றார். அவர் பின்னர் 17 நவம்பர் 1928-இல் காலமானார். இத்தாக்குதலைப் பற்றி ஆங்கிலேய பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டபோது, ஆங்கிலேய அரசு லஜபதி ராயின் மரணத்தில் எந்த பொறுப்பும் ஏற்கவில்லை. பகத்சிங் இச்சம்பவத்தை நேரில் காணவில்லை என்றாலும் பழி வாங்க உறுதி பூண்டு[20] சக புரட்சியாளர்களான சிவராம் ராஜ்குரு, சுக்தேவ் தபர், சந்திரசேகர் ஆசாத் ஆகியோருடன் ஸ்காட்டைக் கொல்லக் கூட்டு சேர்ந்தார். எனினும், பகத்சிங்கிற்கு தவறுதலாக துணை காவல் மேலதிகாரியான சாண்டர்சைச் சுட சமிக்ஞை காட்டப்பட்டது. அதனால் சிங்கும் ராஜ்குருவும் சாண்டர்ஸ் மாவட்ட காவல் தலைமையகத்திலிருந்து வெளிவரும்பொழுது 17 டிசம்பர் 1928 அன்று அவரைச் சுட்டுக்கொன்றனர்.

மகாத்மா காந்தி இக்கொலைச்சம்பவத்தைக் கண்டனம் செய்தார். ஆனால் நேரு கூறியதாவது,

பகத்சிங் பிரபலமடைந்தது அவரின் பயங்கரவாதச் செயலுக்காக அல்ல, ஆனால் அவர் லாலா லஜுபது ராயின் மரியாதையை, மேலும் அவர் மூலம் நம் நாட்டின் மரியாதையையும் நிலைநிறுத்த முயற்சித்ததற்காகவே. அவர் செயல் மறக்கப்பட்டது, ஆனால் அவர் ஒரு விடுதலை போராட்ட சின்னமாக உருமாறினார். சில மாதங்களிலேயே பஞ்சாபின் ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும் மற்றும் சற்று சிறிய வீரியத்துடன் பிற வடக்கு இந்தியப் பகுதிகளிலும் அவரது பெயர் எதிரொலித்துக்கொண்டே இருந்தது.

தப்பிச் செல்லுதல்
சாண்டர்சை கொலை செய்த பின்பு, டி.ஏ.வி கல்லூரி வழியாக சிங்கும் குழுவினரும் தப்பிச் சென்றனர். தலைமை காவல் அதிகாரி சனன் சிங், அவர்களைத் துரத்திப் பிடிக்க முயற்சி செய்த போது, சந்திரசேகர ஆசாத் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள சனன் சிங்கைச் சுட்டதில் அவர் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் காயப்பட்டார்.

பகத்சிங்கின் தூக்குத்தண்டனை
பகத்சிங்கின் தூக்குத்தண்டனையின் போது வெள்ளையர்கள் கேட்ட தூக்குத்தண்டனை அங்கீகரிக்கும் பத்திரத்தில் காந்தி கையொப்பம் இட்டார். தி லெஜன்ட் ஆஃப் பகத்சிங் என்ற இந்தி திரைப்படத்தில் இந்தத் தண்டனைக்கான ஒப்பீட்டு பத்திரத்தில் (காந்தி இர்வின் பேக்ட்) கையெழுத்திட்டதற்காக காந்தியை மக்கள் கடுமையாக விமர்சிப்பது போல் காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. அகிம்சையைப் பின்பற்றுபவர் எப்படி இம்சை தரும் தூக்குத்தண்டனைக்கு ஒப்பீடு அளிக்கலாம் என்பது போல கருத்துகள் மக்களால் பேசப்பட்டது.

# டில்லி: 10 ஆண்டுகளில் காணாமல் போன 1.80 லட்சம் பேர் மீட்பு

**புதுடெல்லி, பிப்.9:**

ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் டெல்லியின் முன்னாள் முதல்-மந்திரியான கெஜ்ரிவால் சமீபத்தில் கூறும்போது, நாட்டின் தலைநகர் டெல்லியில் ஜனவரி 1-ந்தேதி முதல் 15-ந்தேதி வரை பெண்கள், குழந்தைகள் என 807 பேரை காணவில்லை.

அப்படியென்றால், நாளொன்றுக்கு 54 பேர் காணாமல் போயுள்ளனர். அவர்களில் பலர் இளம் சிறுமிகள் என கூறி அதிர்ச்சி ஏற்படுத்தினார். டெல்லியில், மக்களின் பாதுகாப்பு கேள்வியாக உள்ளது. இது அச்சமூட்டும் வகையில் உள்ளது. ஆனால், பா.ஜ.க. அரசோ தூங்கி கொண்டிருக்கிறது என்றும் குற்றச்சாட்டாக கூறினார்.

டெல்லியில் சட்டம் ஒழுங்கு ஐ.சி.யு.வில் உள்ளது என்றும், மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் உங்களுடைய குழந்தைகளை கவனத்துடன் பாதுகாத்து கொள்ளுங்கள் என்றும் கூறினார். இந்நிலையில், குழந்தைகள் காணாமல் போன விவகாரத்தில் பொதுமக்கள் அச்சமடையவோ, பயப்படவோ வேண்டிய அவசியமில்லை என டெல்லி போலீசார் தெரிவித்தனர்.

அவர்கள் வெளியிட்ட தகவலில், டெல்லியில் மக்கள் தொகை அதிகரித்து வரும் சூழலில் 2016-ம் ஆண்டு முதல், ஆண்டுதோறும் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 23 ஆயிரம் முதல் 24 ஆயிரம் என்ற அளவில் உள்ளது. நடப்பு ஆண்டு ஜனவரியில் 1,777 பேர் காணாமல் போயுள்ளனர் என வழக்குகள் பதிவாகி உள்ளன. இது மாதத்திற்கு சராசரியாக 2 ஆயிரம் பேர் என்ற எண்ணிக்கையை விட குறைவு ஆகும். இதுவரை 1 லட்சத்து 80 ஆயிரத்து 805 பேர் கண்டறியப்பட்டு, அவர்களுடைய குடும்பத்தினருடன் மீண்டும் இணைந்துள்ளனர். இதனால், மீட்பு விகிதம் 77 சதவீதம் ஆக உள்ளது என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி 7.4% ஆக உயர்த்தி கணிப்பு: ஆர்பிஐ




**புதுடெல்லி, பிப்.9:**

2025-26 ஆம் ஆண்டுக்கான உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி(ஜிடிபி) 7.4 சதவிகிதம் அதிகரிக்கும் என மத்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

உலகளாவிய வர்த்தக நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் டிரம்ப் வரி விதிப்பு காரணமாக ஏற்பட்ட நிதிச் சந்தை ஏற்ற இறக்கங்களுக்கு மத்தியில், உள்நாட்டுத் தேவையின் நீடித்த தன்மை மீது நம்பிக்கை தெரிவிக்கும் விதமாக, வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் குறுகிய கால கடன்களுக்கான வட்டி விகிதங்களில் (ரெப்போ ரேட்) மாற்றங்களை அறிவிக்காத நாட்டின் மத்திய வங்கியான ரிசர்வ் வங்கி, ஏற்கெனவே கணிக்கப்பட்டிருந்த 2025-26 ஆம் ஆண்டுக்கான உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி(ஜிடிபி) கணிப்பை 7.3 சதவீதத்தில் இருந்து 7.4 சதவீதமாக உயர்த்தியுள்ளது.

திருத்தப்பட்ட இந்தக் கணிப்பு, டிசம்பரில் அறிவிக்கப்பட்ட 7.3 சதவீத வளர்ச்சி மதிப்பீட்டிலிருந்து ஒரு மிதமான உயர்வாகும். இது, ஆசியாவின் மூன்றாவது பெரிய பொருளாதாரம் உலகளாவிய சவால்களிலிருந்து ஒப்பீட்டளவில் பாதுகாக்கப்பட்டு தொடர்ந்து வலுவாக உள்ளது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

2026-27 ஆம் ஆண்டுக்கான தனது முந்தைய கணிப்புகளை ரிசர்வ் வங்கி திருத்தியுள்ளது. முந்தைய மதிப்பீடுகளான 6.7 சதவீதம் மற்றும் 6.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், முதல் காலாண்டில் 6.9 சதவீதமாகவும், இரண்டாவது காலாண்டில் 7 சதவீதமாகவும் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி இருக்கும் என்று ஆண்டறிக்கையில் கணித்திருந்தது. சர்வதேச அளவில் புவி அரசியல் பதற்றங்கள் அதிகரித்தாலும் இந்தியப் பொருளாதாரம் வலுவாக உள்ளது. வளர்ச்சியும் மேம்பட்டு வருகிறது. ஐரோப்பிய யூனியனுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமெரிக்காவுடனும் வர்த்தக ஒப்பந்தம் இறுதிக் கட்டத்தில் உள்ளது. நுகர்வு மற்றும் முதலீட்டில் நீடித்த உத்வேகத்தின் ஆதரவுடன், பொருளாதார செயல்பாடு அடுத்த நிதியாண்டிலும் சிறப்பாக நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

# விசாரணைக்காக மட்டுமே கைது நடவடிக்கைக் கூடாது: உச்சநீதிமன்றம்

**புதுடெல்லி, பிப்.9:**

'கைது நடவடிக்கைஎன்பது ஆதாரங்களைச் சேகரித்தல் உள்ளிட்ட முறையான விசாரணை நடத்துவதற்கு காவல் அதிகாரிக்கு உதவும் சட்டபூர்வவிருப்பத் தேர்வு மட்டுமே; மாறாக, கைது நடவடிக்கையை கட்டாயமானதாகக் கருதக் கூடாது' என்றும் உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியது. பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா (பிஎன்எஸ்எஸ்) 2023 சட்டத்தின் பிரிவு 35(3)-இன் கீழ் கைது நடவடிக்கை தொடர்பான அலாகாபாத் உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இதில், 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கக் கூடிய வகையிலான குற்றம் தொடர்பான அனைத்து வழக்குகளிலும் விசாரணைக்காக இந்தச் சட்டப் பிரிவின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது கைது நடவடிக்கை கட்டாயமானதா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டது. இந்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ், என்.கே.சிங் ஆகியோர் அடங்கிய அமர்வு விதித்த தீர்ப்பு, உச்சநீதிமன்ற வலைதளத்தில் அண்மையில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

அதில் கூறியிருப்பதாவது: பிஎன்எஸ்எஸ் 2023 சட்டத்தின் பிரிவுகள் 35(1) (பி) மற்றும் 35(3) முதல் 35(6) வரையிலான பிரிவுகளைப் பொறுத்தவரை, கேள்வி கேட்பதற்காக அல்லது விசாரணை நடத்துவதற்காக மட்டுமே ஒரு காவல் அதிகாரி ஒருவரை கைது செய்யலாம் என்றுபொருள் அல்ல. மாறாக, 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படக் கூடிய ஒரு குற்றத்தின் மீதான விசாரணை, சம்பந்தப்பட்ட நபரை காவலில் எடுக்காமல் திறம்பட முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதை காவல் அதிகாரி தன்னைத் தானே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே அதன் பொருள். கைது செய்யாமலும் விசாரணையை முன்னெடுத்துச் செல்ல முடியும். இதற்கு முரணான எந்தவொரு விளக்கமும், அந்தச் சட்டப் பிரிவுகளின் நோக்கத்தைச் சிதைத்துவிடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# மத்திய பிரதேசம்: மாசு கலந்த குடிநீர் விவகாரம்; பலி எண்ணிக்கை 33 ஆக உயர்வு



**இந்தூர், பிப்.9:**

மத்திய பிரதேசத்தின் இந்தூர் நகரில் பாகீரதபுரா பகுதியில் மாசு கலந்து குடிநீரைபருகியவிவகாரத்தில் பலியானோர் எண்ணிக்கை 33 ஆக உயர்ந்து உள்ளது. ஆல்கு சவுத்ரி (வயது 70) என்பவர் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கால் கடுமையாக பாதிக்கப்பட்டு, கடந்த ஜனவரி 9-ந்தேதி சிகிச்சைக்காக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

இதன்பின்னர் சுவாச பாதிப்புகளும் ஏற்பட்டதில் உயிரிழந்து உள்ளார். அந்த பகுதியில் சேகரிக்கப்பட்ட குடிநீர் மாதிரிகளில் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் பாக்டீரியாக்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டது.

அந்த பகுதியில் ஒரு பொதுகழிப்பறைக்கு அடியில் சென்ற குடிநீர் குழாயில் கசிவு ஏற்பட்டதில் குடிநீருடன் கழிவுநீர் கலந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.2 லட்சம் நிவாரண நிதி அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டு உள்ளது. 3 பேருக்கு இன்னும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# "அமெரிக்கா உடனான இந்திய வர்த்தக ஒப்பந்தம் ஒரு புதிய அத்தியாயம்..." – ஜெய்சங்கர்

**புதுடெல்லி, பிப்.9:**

இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தில் உள்ளதாகத் தெரிவித்துள்ள வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், இந்த ஒப்பந்தம் இரு தரப்பு உறவுகளில் புதிய அத்தியாயத்தை தொடங்கும்என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தலைநகரில் நடைபெற்ற அரிய வகை கனிமங்கள் தொடர்பான 50-க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்ற சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்ட இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், மாநாட்டின் இடையே அமெரிக்க நிதி அமைச்சர் ஸ்காட் பெசென்ட், வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ ஆகியோரை சந்தித்துப் பேசினார்.

இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான அதிபர் டொனால்டு ட்ரம்ப்பின் அறிவிப்பை அடுத்து இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பு குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள ஜெய்சங்கர், "எனது அமெரிக்கப் பயணம் பயனுள்ளதாகவும், நேர்மறையானதாகவும் இருந்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம், அதன் விவரங்களை இறுதி செய்யும் கட்டத்தில் உள்ளது. அது விரைவில் நிறைவடையும். இது நமது இருதரப்பு உறவுகளில் புதிய அத்தியாயத்தைத் திறக்கிறது. மேலும், பரந்த சாத்தியக்கூறுகளை வழங்குகிறது" என தெரிவித்துள்ளார்.

அரிய வகை கனிமங்கள் குறித்துப் பேசிய ஜெய்சங்கர், "அரிய வகை கனிமங்கள் மீதான நமது ஒத்துழைப்பும் வேகமாக முன்னேறி வருகிறது. வரும் நாட்களில், இரு தரப்பு பிரச்சினைகள், பாதுகாப்பு மற்றும் எரிசக்தி சார்ந்த பிரச்சினைகள் குறித்த பேச்சுவார்த்தைகளை எதிர்பார்க்கிறோம். ஒட்டுமொத்தமாக ஒரு வலுவான உத்வேகம் தெளிவாகத் தெரிகிறது" என குறிப்பிட்டுள்ளார்.

ஸ்மார்ட்போன்கள் தயாரிப்பு முதல் விமானங்கள் தயாரிப்பு வரை பயன்படும் அரிய வகை கனிமங்களை தற்போது சீனாதான் அதிக அளவில் உற்பத்தி செய்து வருகிறது.

உலக அளவிலான விநியோகத்தில் சீனாவின் பங்கு 60 சதவீதத்தை சீனா கொண்டுள்ளது.

இந்நிலையில், சீனாவுக்குப் போட்டியாக அரிய வகை கனிமங்களின் உற்பத்தி, விலை, உலக சங்கிலி ஆகியவற்றை தீர்மானிப்பது தொடர்பாக அமெரிக்கா இந்த மாநாட்டுக்கு ஏற்பாடுகளை செய்திருந்தது. இதில், இந்தியா உட்பட 50-க்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மே 24-இல் யுபிஎஸ்சி சிவில் சர்வீசஸ் முதல்நிலைத் தேர்வு

**புதுடெல்லி, பிப்.9:**

ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஎஃப்எஸ் ஆகிய பதவிகளுக்கு யுபிஎஸ்சி மூலம் ஒவ்வொரு ஆண்டும் முதல்நிலை, பிரதான தேர்வு (மெயின்), நேர்முகத் தேர்வு என 3 கட்டத் தேர்வுகள் நடத்தப்படும். 2026-ஆம் ஆண்டில் 933 பணியிடங்கள், இந்தத் தேர்வு மூலம் நிரப்பப்படவுள்ளது. இதில் 33 பணியிடங்கள், மாற்றுத் திறனாளிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான முதல்நிலைத் தேர்வு மே மாதம் 24-ஆம் தேதி நடத்தப்படுகிறது. இதற்கான அறிவிக்கையை யுபிஎஸ்சி வியாழக்கிழமை வெளியிட்டது.

மேலும் அந்த அறிவிக்கையில், பாதுகாப்பாகவும், சுமூகமாகவும் தேர்வு நடைபெறுவதை உறுதி செய்ய முக அடையாள சரிபார்ப்பு அனைத்து தேர்வு மையங்களிலும் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும், அடையாள சான்றுக்கு ஆதாரை அனைத்துதேர்வாளர்களும்பயன்படுத்தவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது ஐஏஎஸ், ஐஎஃப்எஸ்பணியிடங்களில்பணிபுரிவோர்2026-ஆம்ஆண்டு தேர்வில் பங்கேற்க தகுதி இல்லை என்றும், அதேபோல் ஐபிஎஸ் அதிகாரியாக தேர்வு செய்யப்பட்டிருந்தாலோ அல்லது நியமிக்கப்பட்டிருந்தாலோ, மீண்டும் அதே இடத்திற்கு 2026 தேர்தலில் பங்கேற்க முடியாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கேரளா: வெங்காயம் ஏற்றிச்சென்ற லாரியில் வெடிமருந்து

**திருவனந்தபுரம், பிப்.9:**

கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டம் செம்மண்ட் பகுதியில் வெங்காயம் ஏற்றிச்செல்லும் லாரியில் வெடிமருந்து கடத்தப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. தகவலின் அடிப்படையில் போலீசார் நேற்று இரவு தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, செம்மண்ட் பகுதியில் உள்ள செங்கல் சூளையில் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் வெங்காயம் ஏற்றிச்சென்ற லாரி நின்றுகொண்டிருந்தது.

இதையடுத்து, அந்த லாரியில் இருந்த வெங்காய மூட்டைகளை இறக்கிவிட்டு அதில் போலீசார் சோதனை நடத்தினர். அப்போது, லாரியில் வெங்காய மூட்டைகளுக்கு மத்தியில் வெடிமருந்துகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததை போலீசார் கண்டுபிடித்தனர். 10 ஆயிரம் ஜெலட்டின் குச்சிகள், ஒயர்கள், டெடனேட்டர்கள், வெடிமருந்து உள்ளிட்டவற்றை போலீசார் கைப்பற்றினார். இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார், ஒருவரை கைது செய்தனர். சட்டவிரோத சுரங்கத்தில் பயன்படுத்த இந்த வெடிமருந்து கடத்தி வரப்பட்டதாக போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# சாலை விபத்து இழப்பீடு இழப்பை ஈடு செய்யாது: உச்சநீதிமன்றம்



**புதுடெல்லி, பிப்.9:**

சாலை விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு ரூ.20 லட்சம் இழப்பீடு அளிக்க வெள்ளிக்கிழமை உத்தரவிட்ட உச்சநீதிமன்றம், இத்தகைய விபத்துகளில் ஏற்படும் உயிரிழப்புக்கு அளிக்கப்படும் தொகை எவ்வளவு பெரிதாக இருந்தாலும், அது குடும்பத்தினரின் இழப்பை ஈடுசெய்யாது என்று தெரிவித்தது.

கடந்த 2011-ஆம் ஆண்டு சாலை விபத்தில் உயிரிழந்த வேலு என்ற நபரின் மரணத்துக்கு ரூ.20 லட்சம் இழப்பீடு கோரி, சென்னை மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயத்தை அவரின் குடும்பத்தினர் அணுகினர். லாரி மோதி வேலு உயிரிழந்த நிலையில், அந்த லாரி பாரதி ஆக்ஸா ஜெனரல் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்திருந்தது. வேலுவின் குடும்பத்துக்கு ரூ.9.37 லட்சம் இழப்பீடு வழங்குமாறு அந்தக் காப்பீட்டு நிறுவனத்துக்கு தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

இந்த இழப்பீட்டை ரூ.10.51 லட்சமாக உயர்த்தி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில், அந்தத் தொகையை மேலும் அதிகரிக்கக் கோரி, வேலுவின் குடும்பத்தினர் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் தீபாங்கர் தத்தா, சதீஷ் சந்திர சர்மா ஆகியோர் அடங்கிய அமர்வு, 'சாலை விபத்தில் ஒருவரின் உயிரிழப்புக்கு அளிக்கப்படும் தொகை எவ்வளவு பெரிதாக இருந்தாலும், அது அந்த இழப்பை ஈடுசெய்யாது. உயிரிழந்தவரை சார்ந்திருந்த குடும்ப உறுப்பினர்களுக்கு ஏற்படும் நிதிச் சுமையைக் குறைக்கும் முயற்சியாக இழப்பீடு வழங்கப்படுகிறது.

குடும்பப் பிணைப்புகள் திடீரென முறிந்துபோகும் சந்தர்ப்பங்களில், மனித யதார்த்தங்களுக்கு ஏற்ப சட்டம் செயல்பட வேண்டும்' என்று தெரிவித்தது. இதைத்தொடர்ந்து மனுதாரருக்கான இழப்பீட்டை ரூ.20.80 லட்சமாக உயர்த்தி அளிக்க காப்பீடு நிறுவனத்துக்கு நீதிபதிகள் அமர்வு உத்தரவிட்டது.

# குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு ரூ.20 லட்சம் வரை பிணையில்லாக் கடன்: ஆர்பிஐ அறிவிப்பு

**புதுடெல்லி, பிப்.9:**

ஆர்பிஐ ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா செய்தியாளர்களிடம் கூறியதாவது: குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கான பிணையில்லாக் கடன் உச்சவரம்பு ரூ.10 லட்சத்தில் இருந்து ரூ.20 லட்சமாக அதாவது இரு மடங்கு உயர்த்தப்படுகிறது. ஏப்ரல் 1-ஆம் தேதியில் இருந்து வழங்கப்படும் மற்றும் புதுப்பிக்கப்படும் கடன்களுக்கு இந்தக் கூடுதல் கடன் தொகை வழங்கப்படும்.

இந்த நிறுவனங்களின் செயல்பாடுகள், அவற்றின் திறனை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்க குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதில் நிதியமைச்சகத்தின் நிதிச் சேவைகள் துறை, இந்திய வங்கிகள் கூட்டமைப்பு, தேசிய வேளாண்மை, கிராமப்புற மேம்பாட்டு வங்கி (நபார்டு) ஆகியவை உறுப்பினர்களாக இருக்கும் என்றார்.

# தமிழகம் உள்பட 19 மாநிலங்களில் 8.48 கோடி விவசாயிகளுக்கு எண்ம அடையாள அட்டை வழங்கல்

**புதுடெல்லி, பிப்.9:**

வேளாண் துறையில் எண்ம முறை வேகமாக விரிவுபடுத்தப்படுகிறது; தமிழகம் உள்பட 19 மாநிலங்களைச் சேர்ந்த 8.48 கோடி விவசாயிகளுக்கு எண்ம (டிஜிட்டல்) அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது என்று மாநிலங்களவையில் மத்திய வேளாண் துறை அமைச்சர் சிவராஜ் சிங் செளஹான் தெரிவித்தார்.

மாநிலங்களவையில் வெள்ளிக்கிழமை கேள்வி நேரத்தில் துணைக் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர் மேலும் கூறியதாவது: காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக் காலத்தில் வேளாண் துறையில் எண்ம முன்னெடுப்புகள் எதுவும் மேற்கொள்ளவில்லை. பாஜக ஆட்சியில் வேளாண் துறையில் எண்ம முறை வேகமாக விரிவுபடுத்தப்படுகிறது. 'அக்ரி ஸ்டாஸ்க்' இணையதளம் மூலம் வேளாண்மை, விவசாயிகள் தொடர்பான அனைத்து விவரங்களும் எண்ம முறையில் சேகரிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. விவசாய கிராம விவரங்கள், அங்குள்ள காலநிலை, உயிரிச்சூழல், சாகுபடிப் பயிர்கள் என அனைத்து விவரங்களும் அதில் இடம் பெற்றுள்ளன. தமிழகம், ஆந்திரம், பிகார், குஜராத், உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், கர்நாடகம் உள்பட 19 மாநிலங்களைச் சேர்ந்த 8.48 கோடி விவசாயிகளுக்கு எண்ம (டிஜிட்டல்) அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதில் அவர்களின் நில விவரம், குடும்ப விவரம் என அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அடுத்ததாக கோவா, சிக்கிம், ஜம்மு-காஷ்மீர் விவசாயிகளின் விவரங்கள் பதிவு செய்யப்படவுள்ளன. இந்தத் திட்டத்துக்காக மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அனைத்து நிலைகளிலும் உதவி வருகிறது. விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்குவதன் மூலம் அவர்களுக்கான நிதியுதவி நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்தப்படுவது, குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யும் விளைபொருளுக்கு பணம் செலுத்துவது என அனைத்தும் எளிதாக நடைபெறுகிறது என்றார்.

# சீன பொருள்கள் இறக்குமதியை குறைத்தது இந்தியா: மத்திய வர்த்தக இணையமைச்சர்

**புதுடெல்லி, பிப்.9:**

2024-25-இல் உரங்கள், ரசாயனங்கள், இரும்பு மற்றும் எஃகு உள்பட பல்வேறு துறைகளில் சீன பொருள்கள் இறக்குமதியை இந்தியா குறைத்ததாக மத்திய வர்த்தகத் துறை இணையமைச்சர் ஜிதின் பிரசாத் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இதுதொடர்பாக மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு எழுத்துபூர்வமாக அவர் அளித்த பதிலில், '2014-15 காலகட்டத்தில் இந்தியா ரூ.48,609 கோடிக்கு கைப்பேசிகளை இறக்குமதி செய்த நிலையில் 2024-25-இல் இது ரூ.3,710 கோடியாக குறைந்தது.

மாறாக, இந்தியாவில் இருந்து 2014-15-இல் ரூ.1,566 கோடிக்கு கைப்பேசிகள் ஏற்றுமதி செய்யப்பட்ட நிலையில் 2024-25-இல் ரூ.2.05 லட்சம் கோடியாக பன்மடங்கு உயர்ந்துள்ளது.

2024-25-இல் உரங்கள் (61.4 சதவீதம்), ரசாயனங்கள் மற்றும் அதுதொடர்புடைய பொருள்கள் (19.7 சதவீதம்), இரும்பு மற்றும் எஃகு (10.3 சதவீதம்), மனிதனால் தயாரிக்கப்பட்ட நூல் (9.5 சதவீதம்) உள்பட பல்வேறு துறைகளில் சீன பொருள்கள் இறக்குமதி குறைந்துள்ளது.

இறக்குமதி வெகுவாக உயர்வதைக் கட்டுப்படுத்த மத்திய அரசு தொடர்ந்து கண்காணிப்பைத்தீவிரப்படுத்தி வருகிறது.

அதேசமயம் ஒரே நாடு அல்லது நிறுவனங்களை மட்டுமே சார்ந்திருக்காமல் தங்களது விநியோகச் சங்கிலியை பல்வேறு பகுதிகளுக்கும் விரிவுபடுத்த இந்திய நிறுவனங்களை மத்திய அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது' எனத் தெரிவிக்கப்பட்டது.

# ராஜஸ்தான்: தற்காப்புக்காக சிறுத்தையை கோடரியால் தாக்கிக்கொன்ற விவசாயி

**புதுடெல்லி, பிப்.9:**

ராஜஸ்தான் மாநிலம், கோட்புட்லி-பெஹ்ரூர் மாவட்டத்தில் கர்கதி கிராமத்தைச் சேர்ந்தவர் விவசாயி ஷ்ரவன் குர்ஜர்(48). இவர் தனது ஆடுகளுக்குத் தீவனம் சேகிரிப்பதற்காக வயலுக்குச் சென்றிருந்தார். மரக்கிளைகளை வெட்டிக்கொண்டிருந்தபோது அருகிலுள்ள புதர்களில் மறைந்திருந்த சிறுத்தைக் குட்டி அவரைத் தாக்கியது.

சிறுத்தை நகம் பட்டதோடு கடித்ததில் விவசாயிக்கு பலத்த காயம் ஏற்பட்டது. உடனே தன்னை தற்காத்துக்கொள்ள கோடரியால் சிறுத்தையின் தலையில் தாக்கியுள்ளார். இதில் சிறுத்தை சம்பவ இடத்திலேயே இறந்தது. காயமடைந்த விவசாயி ஆல்வாரில் உள்ள அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறுத்தையின் உடல் துறை அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், விதிகளின்படி மேலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வனத்துறை அதிகாரி மனோஜ் நாகா தெரிவித்தார். இச்சம்பவம் குறித்து மேலும் விசாரணை நடந்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.




# சூளகிரி காவல் நிலைய வளாகத்தில் தீ விபத்து: 50க்கும் மேற்பட்ட வாகனங்கள் தீயில் எரிந்து நாசம்

**சூளகிரி, பிப்.09:** சூளகிரி காவல் நிலைய வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 50க்கும் மேற்பட்ட வாகனங்கள் தீயில் எரிந்து நாசமாகின.

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி காவல் நிலையமானது கிருஷ்ணகிரி - ஒசூர் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது.

இந்தப் பகுதியில் ஏற்பட்ட சாலை விபத்து உள்ளிட்ட பல்வேறு வழக்குகளில் தொடர்புடைய இருசக்கர வாகனங்கள் மற்றும் மேற்பட்ட வாகனங்கள் சூளகிரி காவல் நிலைய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அந்தப் பகுதியில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் காவல் நிலைய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட ஐந்துக்கும் மேற்பட்ட லாரி போன்ற வாகனங்கள் தீயில் கருகி சேதமடைந்தன.

தகவல் அறிந்த, சூளகிரி தீயணைப்பு நிலைய வீரர்கள் நிகழ்வு இடத்துக்கு விரைந்து சென்று தீ மேலும் பரவாமல் தடுத்து நிறுத்தினர். மேலும் சம்பவம் குறித்து சூளகிரி போலீஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

# தமிழகத்தில் சஸ்பெண்டு செய்யப்பட்டுள்ள 202 போலீசார் மீதான நடவடிக்கை ரத்தாகிறது

**சென்னை, பிப்.09:** தமிழகம் முழுவதும் காவல்துறை பணியின் போது முறைகேட்டில் ஈடுபட்டது மற்றும் கவன குறைவாக செயல்பட்டது ஆகிய காரணங்களுக்காக போலீசார் மீதும் அதிகாரிகள் மட்டத்தில் இருப்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது.

மாநிலம் முழுவதும் இதேபோன்று 439 பேர் சஸ்பெண்டு நடவடிக்கை காரணமாக போலீஸ் பணியில் இல்லாமல் உள்ளனர். அதே நேரத்தில் இவர்களுக்கு சஸ்பெண்டு காலத்தில் வழங்கக்கூடிய குறைந்தபட்ச ஊதியமும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது.

இதனை கருத்தில் கொண்டு நீண்ட நாட்களாக சஸ்பெண்டு நடவடிக்கையில் இருந்து வரும் 202 போலீசார் மீதான சஸ்பெண்டு நடவடிக்கையை விடுவிப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக போலீஸ் டிஜிபி வெங்கட்ராமன், அனைத்து காவல் துறை உயர் அதிகாரிகளுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி இருக்கிறார். இதன்படி நடவடிக்கையில் உள்ள 200க்கும் மேற்பட்ட போலீசார் பணிக்கு திரும்பும் சூழல் ஏற்பட்டு உள்ளது.

# தண்டவாளத்தைக் கடந்த 2 பேர் ரயில் மோதி உயிரிழப்பு

**சென்னை, பிப்.09:** தண்டவாளத்தைக் கடக்க முயன்ற 2 பேர் ரயில் மோதி உயிரிழந்தனர்.

சென்னை கடற்கரை நோக்கி வந்த புகர் ரயில் மாம்பலம்-கோடம்பாக்கம் இடையே வந்தபோது, சுமார் 40 வயது மதிக்கத்தக்கவர் தண்டவாளத்தைக் கடக்க முயன்றதில் அவர் மீது ரயில் மோதியதில் உயிரிழந்தார். மாம்பலம் இருப்புப் பாதை ரயில்வே போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

மௌண்ட்-கிண்டி இடையே தண்டவாளத்தைக் கடக்க முயன்றவர் மீது புகர் ரயில் மோதியதில் அவர் உயிரிழந்தார். தாம்பரம் இருப்புப் பாதை போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

கைதி உயிரிழப்பு-போலீஸ் விசாரணை: கண்ணகி நகர் பகுதியைச் சேர்ந்த பாலாஜி (56), புழல் மத்திய சிறை 1-இல் விசாரணை கைதியாக அடைக்கப்பட்டிருந்தார். வெள்ளிக்கிழமை அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டதால், சிறை நிர்வாகம் அவரை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தது. அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் அவர் ஏற்கெனவே இறந்துவிட்டதாக தெரிவித்தார். கொளத்தூர் போலீஸார் விசாரணை நடத்தினர்.

காவலர் மீது காரை மோத முயன்றவர் கைது: வில்லிவாக்கத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணியாற்றி வரும் ரமேஷ், வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, அங்கு காரில் வந்த நபரை நிறுத்த முயன்றதில் அந்த நபர், வேகமாக தப்பினார். அவரை துரத்தி சென்று நிறுத்தியபோது, மற்றொரு காவலர் வாசுதேவன் மீது மோதுவது காரை தாறுமாறாக ஓட்டிய அந்த நபர், அங்கிருந்து தப்பினார். சிறப்பு உதவி ஆய்வாளர் ரமேஷ் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்த போலீஸார், விசாரணை நடத்தி, திருவொற்றியூர் பகுதியைச் சேர்ந்த கல்லூரி மாணவர் பிரவீன்குமாரை (24) வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

ரூ.29 லட்சம் கையாடல்- இரு ஊழியர்கள் கைது: பாடியநல்லூர், எம்.ஏ. கோவில் தெருவைச் சேர்ந்த ஜெயகுமார் (43), அண்ணா நகரில் மென்பொருள் நிறுவனம் நடத்தி வருகிறார். அந்த அலுவலகத்தில் பணியாற்றி வரும் சுரேஷ், ஒரு பெண் ஊழியர் சேர்ந்து இந்த கண்காணிப்பு கேமராக்களை செயலிழக்க வைத்தது தெரிந்தது. இதனால், நிறுவனத்துக்கு வரவேண்டிய ரூ.29 லட்சம் காணாமல் போயிருந்தது. ஊழியர்கள் சுரேஷ், அலெக்ஸ் உள்பட 6 பேர் சேர்ந்த அந்த பணத்தை கையாடல் செய்தது தெரிய வந்தது. அண்ணா நகர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, அயனம்பாக்கத்தை சேர்ந்த சுரேஷ் (40), திருவேற்காடு பகுதியைச் சேர்ந்த அலெக்ஸ் (25) ஆகிய இருவரையும் கைது செய்தனர். 4 பேரைத் தேடி வருகின்றனர்.

கோயில் பூட்டை உடைத்து திருட்டு: மேற்கு மாம்பலம் பகுதியை சேர்ந்த சந்திரசேகர்(48), ஆற்காடு சாலையில் உள்ள வரசக்தி விநாயகர் கோயிலில் பூசாரியாக உள்ளார். கடந்த ஜன. 17-ஆம் தேதி கோயிலை பூட்டிவிட்டு மறுநாள் காலை வந்து பார்த்தபோது கோயிலின் கருவறையின் பூட்டு உடைக்கப்பட்டு உள்ளே இருந்த சிவன், பார்வதி மற்றும் நந்திஸ்வரர் வெண்கல சிலைகள், தங்க காசு மற்றும் வெள்ளிப் பொருள்கள் திருடுபோனது தெரிய வந்தது. இதுகுறித்து பூசாரி அளித்த புகாரின்பேரில், கே.கே. நகர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த கார்த்தி (20) என்பவரை கைது செய்தனர்.

# சென்னையில் நோக்கியா ரூ. 270 கோடி முதலீடு!



**சென்னை, பிப்.09:** சென்னையில் முதற்கட்டமாக நோக்கியா நிறுவனம் ரூ. 270 கோடி முதலீடு செய்ய விருப்பதாக வர்த்தகத் துறை அமைச்சர் டிஆர்பி ராஜா கூறியுள்ளார்.

இதுகுறித்த அறிவிக்கையில் டி ஆர் பி ராஜா கூறியிருப்பதாவது, நிலையான நெட்வொர்க்குகளுக்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வசதிக்காக தமிழ்நாட்டை நோக்கியா அணுகியுள்ளது. இதன் மூலம், தொலைத் தொடர்பில் மாநிலத்தின் தலைமை வலுப்படுகிறது.

சென்னையில் சிப்காட் சிறுசேரியில் நோக்கியா தனது புதிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தைத் திறந்துள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டுக்கு 200 வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

நோக்கியா, மாநிலத்தின் மிக முக்கியமான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முதலீட்டாளர்களில் ஒருவர். இந்த நிறுவனம், ஏற்கெனவே 1997-ல் தமிழ்நாட்டில் 1,000 பொறியாளர்களை பணியமர்த்தியுள்ளது.

முதல்வர் ஸ்டாலினின் அமெரிக்க சுற்றுப்பயணத்தின்போது, கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திலிருந்து இந்த விரிவாக்கம் தொடங்குகிறது. திட்டத்தின் முதல் கட்டம் ரூ. 270 கோடி (முதலில் ரூ. 220 கோடி என்று வாக்குறுதியளிக்கப்பட்டது) முதலீட்டைக் கொண்டு வருகிறது. இரண்டாவது கட்டத்தில் சுமார் ரூ. 300 கோடி என்று கூறப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

# திருவொற்றியூர், மாதவரம் பகுதிகளில் நாளை குடிநீர் விநியோகம் நிறுத்தம்

**மாதவரம், பிப்.09:** மாதவரம், செங்குன்றம் சாலை ஜே.கே. மஹால் அருகில் மற்றும் மாதவரம் பூஸ்டர் குடிநீர் பகிர்மான நிலையத்தில் பிரதான குடிநீர் குழாய் இணைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் திருவொற்றியூர், மணலி ஆகிய மண்டலங்களுக்கு உள்பட்ட சில பகுதிகளில் திங்கள் கிழமை காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தப்படவுள்ளது.

இது குறித்து சென்னை குடிநீர் வாரியம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: மாதவரம், செங்குன்றம் சாலை ஜே.கே. மஹால் அருகில் மற்றும் மாதவரம் பூஸ்டர் குடிநீர் பகிர்மான நிலையத்தில் பிரதான குடிநீர் குழாய் இணைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் திங்கள் கிழமை காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை திருவொற்றியூர் குடிநீர் பகிர்மான நிலையம் மற்றும் மாதவரம் பூஸ்டர் குடிநீர் பகிர்மான நிலையம் தற்காலிகமாக நிறுத்தப்படும்.

மண்டலம் 1 (திருவொற்றியூர்) - எர்ணாவூர், ராஜா சண்முக நகர், கார்கில் நகர் உள்ளிட்ட பகுதிகள்.

மண்டலம் 2 (மணலி) - மணலி புதுநகர், நாப்பாளையம், சடையான் குப்பம், ஆண்டார்குப்பம், துவாரகா நகர், மணலி, மாத்தூர் உள்ளிட்ட பகுதிகள்.

எனவே, பொதுமக்கள் வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக் கொள்ளுமாறும், அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக் கொள்ள வாரியத்தின் இணையதள முகவரியின் பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எவ்வித தடையின்றி வழக்கம்போல் சீரான முறையில் கிடைக்கும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காவல் துறையில் 439 பேரின் இடைநீக்கத்தை ரத்து செய்ய நடவடிக்கை: டிஜிபி ஜி.வெங்கடராமன் உத்தரவு

**சென்னை, பிப்.09:** தமிழக காவல் துறையில் 439 அதிகாரிகள், பணியாளர்கள் மீதான இடைநீக்க உத்தரவை ரத்து செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுத்து, பிப்.13-ஆம் தேதிக்குள் அறிக்கை அளிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு காவல் துறை தலைமை இயக்குநர் (பொ) ஜி.வெங்கடராமன் உத்தரவிட்டுள்ளார்.



தமிழக காவல் துறையில் கடந்த டிச.31-ஆம் தேதி நிலவரப்படி அதிகாரிகள், பணியாளர்கள் என 439 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில், 202 பேர் ஓராண்டுக்கும் மேலாக இடைநீக்கத்தில் உள்ளனர். ஊழல் ஒழிப்புத் துறை வழக்குகள், குற்றவியல் வழக்குகள், துறை ரீதியான நடவடிக்கைகளில் சிக்கியதால் காவல் துறை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. இவர்களுக்கு இடைநீக்க காலத்தில் வழங்கப்பட வேண்டிய குறைந்தபட்ச ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

இடைநீக்கத்தை ரத்து செய்ய நடவடிக்கை: இந்த நிலையில், சட்டத்துக்கு உள்பட்டு 439 பேரின் இடைநீக்கத்தை ரத்து செய்து, அவர்களை மீண்டும் பணியில் சேர்க்க தேவையான நடவடிக்கை எடுக்குமாறு காவல் துறை அதிகாரிகளுக்கு தமிழக காவல் துறை இயக்குநர் (பொ) ஜி.வெங்கடராமன் உத்தரவிட்டுள்ளார்.

தனித்தனியே ஆய்வு செய்ய வேண்டும்: அதன்படி, அதிகாரிகள் தங்களது அதிகார வரம்புக்குள்பட்ட அனைத்து இடைநீக்க வழக்குகளையும் தனித்தனியே ஆய்வு செய்து, இடைநீக்கத்தை ரத்து செய்வது குறித்து முடிவெடுக்கலாம்.

முன்னுரிமை அளிக்க வேண்டும்: நீண்ட காலமாக இடைநீக்கத்தில் உள்ளவர்கள், நீதிமன்றங்களால் குற்ற வழக்குகள் ரத்து செய்யப்பட்ட பணியாளர்கள், கடுமையான தவறு அல்லது தீவிரமான முறைகேட்டிலோ தொடர்பில்லாத பணியாளர்கள் மீதான இடைநீக்கத்தை ரத்து செய்ய முன்னுரிமை அளிக்கலாம். குற்றச்சாட்டுகளின் தன்மை, சம்பந்தப்பட்ட காவல் துறைப் பணியாளரின் தவறு அல்லாத காரணங்களைக் கருத்தில் கொண்டும் இடைநீக்கத்தை ரத்து செய்யலாம்.

துறை ரீதியான விசாரணை வழக்காக இருந்தாலும், குற்றவியல் விசாரணை வழக்காக இருந்தாலும் ஒழுங்கு நடவடிக்கைகள் அல்லது பொது நலனுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபட்சத்தில் இடைநீக்கத்தை முன்னுரிமை அளித்து ரத்து செய்யலாம்.

ஊழல் வழக்குகளில் சிக்கியவர்களின் இடைநீக்கத்தை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையுடன் கலந்தாலோசித்து இடைநீக்கத்தை ரத்து செய்ய முடிவு செய்யலாம்.

முக்கியத்துவம் அல்லாத பதவிகளில்: முழுமையாக நிரபராதி என்று நிரூபிக்கப்படுவதற்கு முன்பாக மீண்டும் பணியில் அமர்த்தப்பட்ட காவல் துறை பணியாளர்களை முக்கியத்துவம் இல்லாத பதவியில் நியமிக்க வேண்டும்.

காவல் துறையின் அனைத்துப் பிரிவு அதிகாரிகளும் அறிவுரைகளைப் பின்பற்றி, பணியாளர்களின் இடைநீக்கத்தை உடனே ரத்து செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இதுதொடர்பான அறிக்கையை, பிப். 13-ஆம் தேதிக்குள் அல்லது அதற்கு முன்பாகவோ அனுப்பிவைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்லது.

அதிகாரிகளுக்கு அறிவுரை

இடைநீக்கம் என்பது ஒரு அரசு ஊழியரிடம் இருந்து எந்த வேலையும் பெறாமல், அவருக்கு ஊதியம் வழங்கப்படுவதாகும். எனவே, இடைநீக்கம் செய்ய உத்தரவிடும் அதிகாரம் கவனத்துடனும், நிதானத்துடனும் பயன்படுத்தப்பட வேண்டும். தொடர்புடைய அனைத்து காரணிகளையும் பரிசீலித்த பிறகு, அத்தகைய நடவடிக்கை அவசியமானது, பொது நலனுக்கு உகந்தது என்ற காரணத்துடன் கூடிய முடிவைப் பதிவு செய்யாத வரையில் இடைநீக்க உத்தரவை பிறப்பிக்கக் கூடாது என்று அதிகாரிகளுக்கு காவல் துறை தலைமை இயக்குநர் (பொ) ஜி.வெங்கடராமன் தனது உத்தரவில் தெரிவித்துள்ளார்.

# சேலத்தில் விஜய் பிரசாரக் கூட்டத்துக்கு அனுமதி! நிபந்தனைகள் என்னென்ன?




**சேலம், பிப்.09:** சேலத்தில் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் பங்கேற்கும் பிரசாரக் கூட்டத்துக்கு பல்வேறு நிபந்தனைகளுடன் சேலம் மாநகர காவல் துறை அனுமதி வழங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சேலம் மாவட்டம் சீலநாயக்கன்பட்டி நெடுஞ்சாலை அருகே உள்ள தாளமுத்து நடராஜன் திடலில் கூட்டம் நடத்த அனுமதி கோரி, தவெக மத்திய மாவட்டச் செயலாளர் தமிழன் ஆ.பார்த்திபன் தலைமையில் தவெக நிர்வாகிகள், காவல் ஆணையர் அனில்குமார் கிரியிடம் கடந்த புதன்கிழமை மனு அளித்தனர். ஆனால், அரசு வழிகாட்டுதல்படி வழிமுறைகள் குறிப்பிடப்படவில்லை என்று தெரித்து அந்த மனு காவல் துறை சார்பில் நிராகரிக்கப்பட்டது.

முன்னதாக, சேலம் மகுடஞ்சாவடி பகுதியில் உள்ள காளிகவுண்டம்பாளையம் பகுதி திடலில் விஜய் மக்கள் சந்திப்பு கூட்டத்துக்கு அனுமதி கோரி, மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் ஒன்றியச் செயலாளர் கார்த்தி கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மனு அளித்திருந்தார். இந்த மனு காவல் துறை பரிசீலனையில் இருந்தது. இதனிடையே, மகுடஞ்சாவடி திடலில் விஜய் மக்கள் சந்திப்பு கூட்டத்துக்கு மீண்டும் அனுமதி கேட்டு, சேலம் மாநகர காவல் ஆணையரிடம் தவெக நிர்வாகிகள் மீண்டும் மனு அளித்தனர். அந்த மனுவில், விஜய் மக்கள் சந்திப்பு கூட்டத்தில் 5 ஆயிரம் மட்டுமே கலந்துகொள்வார்கள் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், சேலத்தில் தவெக தலைவர் விஜய் பங்கேற்கும் கூட்டத்துக்கு பல்வேறு நிபந்தனைகளுடன் சேலம் மாநகர காவல் துறை அனுமதி வழங்கியுள்ளதாகத் தகவல் தெரியவந்துள்ளது. 5000 பேருக்கு மேல் பங்கேற்க மாட்டார்கள் என தவெகவினர் உத்தரவாதம் அளித்த நிலையில், காவல் துறையினர் அனுமதி வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. குழந்தைகள் மற்றும் கருவுற்றப் பெண்கள் கூட்டத்தில் பங்கேற்கக் கூடாது, அனைவருக்கும் டோக்கன் வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட நிபந்தனைகளைப் பின்பற்ற வேண்டும் என்று சேலம் மாநகர காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

வரும் பிப். 13 ஆம் தேதி நடைபெறும் கூட்டத்துக்கு பகல் 12 மணி முதல் 3 மணி வரை மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் தெரியவந்துள்ளது.

# தி.மு.க. அரசின் குளறுபடியால் குரூப் 2, 2ஏ தேர்வுகள் ரத்து- அண்ணாமலை கண்டனம்

**சென்னை, பிப்.09:** தமிழ்நாடு முழுவதும் இன்று நடைபெறவிருந்த குரூப் 2, 2ஏ முதன்மைத் தேர்வில் தேர்வு மையம் ஒதுக்குவதில் ஏற்பட்ட குளறுபடியால் கடைசி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டதற்கு தமிழக பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவரும் தேசிய பொதுக்குழு உறுப்பினருமான அண்ணாமலை கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,



இன்று நடைபெறவிருந்த டிஎன்பிஎஸ்சி குரூப்2, குரூப் 2 ஏ தேர்வுகள், தேர்வு மையங்களை அமைப்பதில் தி.மு.க. அரசு செய்த குளறுபடியால் ரத்து செய்யப்பட்டிருப்பது வன்மையாகக்கண்டிக்கத்தக்கது. அரசுத் தேர்வுகளுக்கான அடிப்படை ஏற்பாடுகளைக் கூடச் செய்ய முடியாத கையாலாகாத நிலையில், தி.மு.க. அரசு செயல்பட்டு வருகிறது.


அரசுப் பணிகளுக்காக, பல ஆண்டு காலம் கடுமையாக தங்கள் உழைப்பைக் கொடுத்து, தேர்வு மையங்களுக்குச் சென்ற இளைஞர்களின் கனவு பறிக்கப்பட்டுள்ளது. இத்தனை ஆண்டு காலம் இல்லாத இந்தக் குளறுபடி, லஞ்சம் வாங்கிக் கொண்டு அரசுப் பணி வழங்கும் வரலாறு கொண்ட தி.மு.க. அமைச்சர்களால் நடத்தப்பட்டதா என்ற சந்தேகம் வலுவாக எழுகிறது.

லஞ்சம் ஊழல் நிறைந்த, நிர்வாகத் திறனற்ற கையாலாகாத அரசை நடத்திக் கொண்டிருக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழக இளைஞர்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழக சட்டமன்ற தேர்தலுக்கான இறுதி வாக்காளர் பட்டியல்: வெளியாகும் தேதி அறிவிப்பு

**சென்னை, பிப்.09:** தமிழகத்தில் 2026-ம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, இந்தியத் தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வரும் 'சிறப்புத் தீவிரத் திருத்தப் பணிகள்' (Special Intensive Revision) நிறைவடையும் நிலையில் உள்ளன.




இதன்படி, இறுதி வாக்காளர் பட்டியல் வரும் பிப்ரவரி 17, 2026 (செவ்வாய்க்கிழமை) அன்று அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட உள்ளது.

தேர்தல் ஆணையத்தின் திருத்தப்பட்ட அட்டவணையின்படி, கடந்த ஆண்டு டிசம்பர் 19ம் தேதி ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

டிசம்பர் 19 - ஜனவரி 18 வரை பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தங்களுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. பிப்ரவரி 10 வரை, பெறப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் ஆட்சேபனைகள் மீதான சரிபார்ப்பு மற்றும் தீர்வு காணும் பணிகள் நடைபெறும்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க, திருத்தங்கள் செய்யக்கோரி பெறப்பட்ட 34.75 லட்சம் விண்ணப்பங்கள் மீதான பரிசீலனை பணிகள் பிப். 10ம் தேதியுடன் முடிவடையும் நிலையில் 90% நிறைவுபெற்றது என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பிப்ரவரி 17 அன்று அனைத்து மாவட்டங்களிலும் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுகிறது.

# சேப்பாக்கம் மைதானத்திற்குள் விசில் எடுத்துச் செல்ல போலீஸ் தடை!

**சென்னை, பிப்.09:** 2026 டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற்று வருகிறது. மொத்தம் 20 அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடரின் 4வது போட்டியில் ஆப்கானிஸ்தான் மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதின. சென்னையில் உள்ள சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது.

சேப்பாக்கம் மைதானத்திற்கு வரும் ரசிகர்கள் "விசில்" எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. முன்னதாக சேப்பாகம் மைதானத்திற்குள் மதுபானம், சிகரெட், தண்ணீர் பாட்டில், டிரோன், லேப்டாப் என பல பொருட்கள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தற்போது ரசிகர்கள் மைதானத்திற்குள் விசில் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஐசிசி, பிசிசிஐ தரப்பில் விசிலுக்கு தடை குறித்த அதிகாரப்பூர்வ விதிமுறை எதுவும் இல்லை.

எனினும், உள்ளூர் கிரிக்கெட் வாரியம், காவல் துறை மற்றும் மைதான நிர்வாகம் தரர்பில் இப்படி தடை விதிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

# ஊட்டி அருகே 2 சிறுத்தைகள் மர்மமான முறையில் உயிரிழப்பு



**மஞ்சூர், பிப்.09:** ஊட்டி அருகேயுள்ள குந்தா வனச் சரகத்தில் 2 சிறுத்தைகள் மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்தன. செந்நாய்கள் தாக்கியதில் இறந்ததா அல்லது விஷம் வைத்து கொல்லப்பட்டதா என்று வனத்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

நீலகிரி மாவட்ட வனப் பகுதியில் புலி, யானை, சிறுத்தை, கரடி, காட்டு மாடு உள்ளிட்ட விலங்குகள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. இவை பல நேரங்களில் இரை தேடி வனத்தையொட்டிய கிராமங்களுக்குள் வருவதால், மனித - வனவிலங்கு மோதல் ஏற்படுகிறது.

இந்நிலையில், குந்தா வனச் சரகத்துக்கு உட்பட்ட மஞ்சக்கொம்பை பகுதியில் தனியார் இடத்தில் நேற்று முன்தினம் 2 வயதுள்ள பெண் சிறுத்தை தண்ணீரிலும், 6 வயதுள்ள ஆண் சிறுத்தை நிலத்திலும் மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்தன.

இவற்றைப் பார்த்த பொதுமக்கள் வனத்துறைக்கு தகவல் தெரிவித்தனர். மாவட்ட வன அலுவலர் கவுதம், குந்தா வனச் சரகர் செல்வகுமார் தலைமையிலான வனத் துறையினர் மற்றும் கால்நடை டாக்டர்கள் அங்கு சென்றுஆய்வு செய்தனர். இறந்துகிடந்த சிறுத்தைகளுக்கு உடற்கூராய்வு செய்யப்பட்டு, பின்னர் எரியூட்டப்பட்டன.

இதுகுறித்து வனச்சரகர் செல்வகுமார் கூறும் போது, "கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு இதேபகுதியில் செந்நாய்கள் நடமாட்டம் அதிகம் இருந்துள்ளது.

கடந்த மாதம் காட்டு மாட்டை செந்நாய்கள் வேட்டையாடிய வீடியோ வெளியானது.

சிறுத்தைகள் இறந்து கிடந்த இப்பகுதியில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் செந்நாய்கள் நடமாடியதை பொதுமக்கள் பார்த்துஉள்ளனர்.

2 சிறுத்தைகளின் பின்புறத்திலும் செந்நாய்கள் கடித்தது போன்ற தடயம் உள்ளது. அருகில் செந்நாய்களின் எச்சம் உள்ளது. செந்நாய்கள் கடித்து உயிரிழந்ததா அல்லது விஷம் வைத்து கொல்லப்பட்டதா என்று பிரேதப் பரிசோதனைக்குப் பின்னர் தெரியவரும்" என்றார்.

# தமிழகத்தில் பிப். 12 வரை இயல்பைவிட வெப்பம் அதிகமாக இருக்கும்



தமிழகத்தில் ஞாயிற்றுக்கிழமை (பிப். 8) முதல் பிப். 12-ஆம் தேதி வரை இயல்பைவிட வெப்பநிலை அதிகமாக இருக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் சாாபில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை (பிப். 8) முதல் பிப். 11-ஆம் தேதி வரை வட வானிலையே நிலவும். நீலகிரி, திண்டுக்கல், சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூா், வேலூா், ராணிபேட்டை ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலையில் மிதமான பனிப்பொழிவு இருக்கும்.

இதற்கிடையே, பகல் நேரங்களில் தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை படிப்படியாகஉயரும்.சென்னை மற்றும் புகா் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஓரிரு இடங்களில் மிதமான பனிப்பொழிவு இருக்கும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னையில் 474 இடங்களில் 5,176 கழிப்பிடங்கள் - பராமரிக்கும் மாநகராட்சி




**சென்னை, பிப்.09:** மாநகராட்சி சார்பில், பொது கழிப்பிட மேலாண்மை திட்டத்தின் கீழ், சென்னையில் இதுவரை 474 இடங்களில் 5,176 இருக்கைகள் கொண்ட கழிப்பிடங்கள் (இண்டியன் டாய்லட்) அமைக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக, சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: மாநகராட்சிப் பகுதிகளில் மக்கள் பயன்பெறும் வகையிலும், தூய்மையாகவும், பாதுகாப்பாகவும், எளிதாக பயன்படுத்தக் கூடியதாகவும் இருக்கும் வகையில், பொதுக் கழிப்பிட மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு 260 இடங்களில் இலவச ஒப்பனை அறைகள் 3,271 இருக்கைகளுடன் அமைக்கப்பட்டு தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, கழிப்பிட இருக்கைகளின் எண்ணிக்கை மேலும் கூடுதலாக 214 இடங்களில் 1,905 இருக்கைகளுடன் அமைக்கப்பட்டு இம்மாதம் முதல் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. தற்போது வரை மொத்தமாக 474 இடங்களில் இலவச ஒப்பனை அறைகள் 5,176 கழிப்பிட இருக்கை களுடன் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. ஜூன் மாத இறுதிக்குள் இத்திட்டத்தின் கீழ், மொத்தம் 1.262 இடங்களில் 10.437 கழிப்பிட இருக்கைகளாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒவ்வொருகழிப்பிடத்துக்கும் தனித்தனியாக பணியாளர்கள் அமர்த்தப்பட்டு, அட்டவணைப்படி தொடர்ந்து சுத்தம் செய்து பராமரிக் கப்பட்டு வருகிறது. இந்தப் பணி யாளர்களின் பாதுகாப்புக்காக கையுறை, முகக்கவசம், காலணி கள் உள்ளிட்ட பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், இவர்களுக்கு பாதுகாப்பு நடைமுறைகள், ரசாயனங்களை முறையாக கையாளுதல், தனிப்பட்ட சுகாதாரம் குறித்தும் தொடர் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மக்களின் தேவைக்கேற்ப மாநகராட்சிப் பூங்காக்கள், மயான பூமிகள் உள்ளிட்ட இடங்களிலும் கழிப்பிடங்கள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட உள்ளது.

இந்த பொதுக் கழிப்பிட மேலாண்மைத் திட்டமானது, திறந்தவெளியில் மலம் மற்றும் சிறுநீர் கழிப்பதைத் தவிர்த்து பொதுசுகாதாரத்தை மேம்படுத்துகிறது. பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் கழிப்பறைகள் கட்ட மாநகராட்சியின் 1913 என்றதொலை பேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவித்திடும் தகவல்களின் அடிப்படையில், சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு மாநகராட்சி சார்பில் கழிப் பறைகள் கட்ட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கழிப்பறை தூய்மை விழிப்புணர்வு: சென்னை மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டுள்ள நவீன கழிப் பறை பகுதிகளில் 'நம் கழிப்பறை நம் பொறுப்பு' என்ற பிரச்சாரக் கருப்பொருளில் அப்பகுதிகளைச் சார்ந்த மக்கள் பங்கேற்கும் சமூகக் கூட்டம் இன்று (பிப்.8) நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில், குப்பைகளை யும், சானிட்டரி நாப்கின்களையும் குப்பைத் தொட்டியில் போடுதல், கழிப்பறைக்கு உள்ளேயும், வெளி யேயும் குப்பை கொட்டுவதைத் தவிர்த்தல், கழிப்பறைகளை சேதப்படுத்துவதைத் தடுத்தல் குறித்தும் எடுத்துரைத்தல் குறித்து விளக்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது. இக்கூட்டத்தில் அந்தந்த பகுதி பொதுமக்கள் பங்கேற்று தங்களது கருத்துக்களை வழங்கலாம் என மாநகராட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

# பசுமை வழிச்சாலை டு மந்தைவெளி: சென்னை மெட்ரோ ரயில் வழித்தட சுரங்கப் பணி நிறைவு





**சென்னை, பிப்.09:** இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில், மாதவரம் - சிறுசேரி சிப்காட் வரையிலான 3-வது வழித் தடத்தில், பசுமை வழிச்சாலை- மந்தைவெளி நிலையம் வரை 763 மீட்டருக்கு சுரங்கப் பாதை பணியை "நொய்யல்" சுரங்கம் தோண்டும் இயந்திரம் வெற்றிகரமாக நிறைவு செய்தது.

சென்னையில், 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் 116.1கி.மீ. தொலைவில் 3 வழித் தடங்களில் செயல்படுத்தப்படுகிறது. இவற்றில், மாதவரம் -சிறுசேரி சிப்காட் வரையிலான 3-வது வழித்தடம் ஒன்றாகும். இத்தடத்தில் ஒரு பகுதியாக. பசுமை வழிச்சாலை - மந்தைவெளி நிலையம் இடையே சுரங்கப் பாதை அமைக்கும் பணிகள் கடந்த 2023-ம் ஆண்டு செப்டம்பரில் தொடங்கியது.

இந்த சுரங்கப் பாதை பணிகளுக்காக, நொய்யல், வைகை என பெயரிடப்பட்ட 2 சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் பயன் படுத்தப்பட்டன. வைகை சுரங்கம் தோண்டும் இயந்திரம், பசுமை வழிச்சாலை நிலையத்தில் இருந்து (அப்-லைன்) சுரங்கம் தோண்டும் பணியைத் தொடங்கி, கடந்த ஆண்டு அக்.18-ல் பணியை முடித்து மந்தைவெளி நிலையத்தை வந்தடைந்தது.

763 மீட்டர் நீளத்துக்கு...: நொய்யல் இயந்திரம், பசுமைவழிச் சாலை நிலையத்தில் இருந்து (டவுன் லைன்) 763 மீட்டர் நீளத்துக்கு சுரங்கம் தோண்டும் பணியை நேற்று வெற்றிகரமாக முடித்து, மந்தைவெளி நிலையத்தை வந்தடைந்தது. இந்நிகழ்வில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் தி.அர்ச்சுனன், தலைமை பொது மேலாளர்கள் டி.லிவிங்ஸ் டோன் எலியேசர் (திட்டம் திட் டமிடல் மற்றும் வடிவமைப்பு), எஸ்.அசோக் குமார் (வழித் தடம் மற்றும் உயர்மட்டகட்டு மானம்), பொது மேலாளர்கள் ஆண்டோ ஜோஸ்மேனாச்சேரி (சுரங்கப்பாதை கட்டுமானம்). ரவிச்சந்திரன் (சுரங்கப்பாதை கட்டுமானம்), லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனத்தின் திட்ட இயக்குநர் லட்சுமி பிரசாத் மற்றும் உயர் அலுவலர்கள், பணியாளர்கள் தளத்தில் இருந்து பார்வையிட்டனர்.

இது குறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: குடியிருப்புகள் நிறைந்த பகுதிகளுக்கு அடியில் சுரங்கம் தோண்டும் பணி நடைபெற்றது. சுரங்கம் தோண்டும் இயந்திரம் 75 கட்டிடங்களுக்கு கீழே சென்றது. இக்கட்டிடங்களுக்கும் சுரங்கப் பாதைக்கும் இடையேயுள்ள மண் அடுக்கு 9 மீட்டரில் இருந்து 12 மீட்டர் வரை இருந்தது.

மந்தைவெளி பகுதியில் ஏற்கனவே பல முக்கியமான அடிப்படை வசதி கட்டமைப்புகள், அதாவது. கழிவுநீர் குழாய்கள், குடிநீர் குழாய்கள், மின்சார இணைப்புகள் ஆகியன இருந்தன. இதன் காரணமாக, மிகக் கவனமான திட்டமிடலும், கூடுதல் கட்டுமான காலமும் தேவைப்பட்டது. இப்பணியை முடிக்க 419 நாட்கள் தேவைப்பட்டது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# பிளஸ் 2 தேர்வு: தனித் தேர்வர்கள் தட்கலில் விண்ணப்பிக்க வாய்ப்பு

**சென்னை, பிப்.09:** தமிழகத்தில் மார்ச் - ஏப்ரலில் நடைபெறவுள்ள பிளஸ் 2, பத்தாம் வகுப்பு பொதுத் தோ்வுக்கு இதுவரை விண்ணப்பிக்க தவறிய தனித் தோ்வா்கள் சிறப்பு தட்கல் முறையின் கீழ் விண்ணப்பிக்கலாம் என அரசுத் தோ்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது. விண்ணப்பிக்க விரும்பும் தனித்தோ்வா்கள் செவ்வாய் மற்றும் புதன்கிழமை (பிப். 10, 11) ஆகிய நாள்களில் அந்தந்த மாவட்ட அரசுத் தோவுகள் உதவி இயக்குநா அலுவலகத்துக்கு நேரில் சென்று தோ்வுக் கட்டணத்துடன் ரூ.1,000 (பிளஸ் 2), ரூ.500 (பத்தாம் வகுப்பு) ஆகியவை சோத்துக் கட்டணமாக செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.

இணைய வழியில் விண்ணப்பங்களை பதிவு செய்வது குறித்து தனித் தோ்வா்களுக்கான தகுதி மற்றும் அறிவுரைகள் இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

விவரங்கள் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலகங்கள், அனைத்து மாவட்ட கல்வி அலுவலகங்கள் மற்றும் அனைத்து அரசுத் தோவுகள் உதவி இயக்குநா அலுவலகங்களிலும் தெரிந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## அரசியல் கார்னர்

# "மீத்தேன் திட்டத்துக்கு கையெழுத்திட்டவர்..." - தஞ்சையில் ஸ்டாலினை சாடிய இபிஎஸ்!

**தஞ்சாவூர், பிப்.09:** "மீத்தேன் திட்டத்துக்கு கையெழுத்திட்டவர் ஸ்டாலின். ஆனால், விவசாயம் பாதிக்கப்படும் போதெல்லாம், விவசாயிகளை காப்பாற்றியதுஅதிமுக அரசு. அதிமுக மக்களுக்கான இயக்கம், திமுக குடும்பத்துக்கான கட்சி" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

தஞ்சை மாவட்டம் திருவையாறில் அதிமுக நிர்வாகியின் திருமண நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, "விவசாயிகளுக்கு எப்போதும் பல்வேறு நன்மைகளை செய்தது அதிமுக ஆட்சிதான். திமுக ஆட்சியில் துணை முதல்வராக இருந்தபோது மீத்தேன் திட்டத்துக்கு கையெழுத்து இட்டவர் மு.க.ஸ்டாலின். ஆனால், அந்த மீத்தேன் எடுக்கவிடாமல் நடவடிக்கை எடுத்தவர் ஜெயலலிதா. எங்கள் ஆட்சியில் குடிமராமத்து திட்டம் மூலம் அனைத்து நீர்நிலைகளையும் தூர்வாரினோம்.

உர மானியம், உழவு மானியம், குறுவை தொகுப்பு திட்டத்தை நாங்கள் சிறப்பாக வழங்கினோம். 5 ஆண்டுகளில் இரு முறை கூட்டுறவு பயிர்க்கடனை தள்ளுபடி செய்தோம். விவசாயம் பாதிக்கப்படும் போதெல்லாம், விவசாயிகளை காப்பாற்றியது அதிமுக அரசே. அதிமுக மக்களுக்கான இயக்கம், திமுக குடும்பத்துக்கான கட்சி. இங்கு தொண்டர்கள்தான் தலைவர்கள்.

முதல்வராக நான் இருந்தபோது, கடும் வறட்சி, கஜா புயல், கரோனா என சோதனையான காலகட்டத்திலும் அதிமுக ஆட்சியில் சிறப்பான நிர்வாகத்தை கொடுத்தோம். ஓராண்டு காலம் கரோனாவால் எதுவும் இயங்காமல் அரசுக்கு ஒரு ரூபாய் கூட வருமானம் இல்லை. அந்த சூழலிலும் சிறப்பான ஆட்சி நடத்தினோம். தற்போது வருமானம் வரும் காலத்திலும் திமுக அரசு கடன் வாங்குகிறது. இதுவரை திமுக ஆட்சி ரூ.5 லட்சம் கோடி கடன் வாங்கியிருக்கிறது.

விலைவாசி உயர்வு, பாலியல் வன்கொடுமைகள், கொலை, கொள்ளை, குற்றங்கள், போதைப்பொருள் புழக்கம் ஆகியவற்றால் தற்போது தமிழக மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே மக்கள் அதிமுக ஆட்சியை மீண்டும் கொண்டுவர வேண்டும்" என்றார்.

# சட்டசபை தேர்தலில் விஜய் தி.மு.க. கூட்டணிக்கு பாதிப்பை ஏற்படுத்துவார் - டி.டி.வி. தினகரன்

**சுவாமிமலை, பிப்.09:** கும்பகோணத்தில் அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் நிருபர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

சட்டசபை தேர்தலில் விஜய் கண்டிப்பாக தி.மு.க. கூட்டணிக்கு பாதிப்பை ஏற்படுத்துவார். விஜய்யின் வருகை தி.மு.க. கூட்டணிக்கு மிகப் பெரிய பாதிப்பாகவும், அ.தி. மு.க. தலைமையிலான என்.டி.ஏ. கூட்டணிக்கு சாதகமாகவும் அமையும்.

தமிழகம் தற்போது போதை வஸ்துக்களின் சர்வதே சந்தையாகவும், சர்வதேச துறைமுகமாகவும் மாறி விட்டது. பள்ளி மாணவனிடன் போதைப்பொருள் இருக்கிறது. கடந்த சட்டசபை தேர்தலில் நாங்கள் தனித்து போட்டியிட்டதால், அது தி.மு.க.விற்கு சாதகமாக போனது. இம்முறை அ.தி. மு.க. தலைமையிலான என்.டி.ஏ. கூட்டணி அ.ம.மு.க. இணைந்துள்ளதால் அந்த வாய்ப்பு தி.மு.க.விற்கு கிடைக்காது

எனவே வரும் தமிழக சட்டசபை தேர்தலில் என்.டி.ஏ. கூட்டணியில் அ.தி.மு.க. தலைமையில், 200 இடங்களில் வெற்றி பெற்று அம்மாவின் ஆட்சி அமையும்.

திடீர் சாம்பார், துரித உணவுகளை போல, சில கட்சிகள் 2026 தேர்தலில் போட்டியிடுவதற்காக மாற்று கட்சியில் இருந்து கோடிக்கணக்கில் பணம் கொடுத்து வேட்பாளர்களை தேடி வருகின்றனர்.

கடந்த 10 ஆண்டுகளாக தி.மு.க. கூட்டணி ஒற்றுமையாக இருப்பது போல் வெளியில் காட்டிக் கொண்டாலும் உள்ளுக்குள் அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை என்பது தற்போது வெட்ட வெளிச்சமாகி வருகிறது. கொள்கை கூட்டணி என்கிறார்கள். கொள்கை ஒன்றாக இருந்தால் அவர்களுக்கு தனித்தனி கட்சி தேவை இல்லை. காங்கிரசை எதிர்த்து தான் தி.மு.க. உருவாக்கப்பட்டது. அதுபோல் கேரளாவில் கம்யூனிஸ்டும் காங்கிரசும் நேரடி மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே இவர்களுக்குள் ஒற்றுமை என்பது இல்லை என்றார்.

# த.வெ.க.வுக்கு எதிரி தி.மு.க.தான்... அ.தி.மு.க. ஒரு கட்சியே அல்ல - செங்கோட்டையன்

**ஈரோடு, பிப்.09:** ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில் த.வெ.க. நிர்வாகக் குழுத் தலைவர் செங்கோட்டையன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* தமிழக வெற்றிக்கழகத்தின் ஒரே எதிரி தி.மு.க. தான். பா.ஜ.க. கூட்டணியில் உள்ள அ.தி.மு.க. எங்களுக்கு ஒரு பொருட்டல்ல.
* தமிழ்நாடு அரசியல் களத்தில் த.வெ.க.வுக்கு எதிரி தி.மு.க.தான். அ.தி.மு.க. ஒரு கட்சியே அல்ல.
* தமிழக வெற்றிக்கழகம் சார்பில் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஒரே நாளில் 10,000 பேர் விருப்ப மனு அளித்துள்ளனர்.
* த.வெ.க. சார்பில் விருப்ப மனு அளிக்க வந்து 15,000 பேர் திரும்ப சென்றதால் ஆன்லைனில் விருப்ப மனு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
* த.வெ.க. கூட்டணிக்கு சில கட்சிகள் வருவார்கள். தி.மு.க., அ.தி.மு.க. கூட்டணியில் இடம் கிடைக்காதவர்கள் த.வெ.க.விற்கு வருவார்கள்.
* குறுகிய காலக்கட்டத்தில் கூட்டணி அமையும்.

இவ்வாறு அவர் கூறினார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com